உ

திருச்சிற்றம்பலம்.

கடல்சூழ்ந்த நெடியபுவியைக்
காத்திரக்ஷிக்கும்படி தென்பனைசைமாநகர்
வடகலைவேள்வி நாட்டரசன் கோட்டையில்
எழுந்தருளி யிராநின்ற

கண்ணுடையம்மன் பள்.

இஃது
மேற்படி அம்மனது வரப்பிரசாதம் பெற்றருளிய
ம-ா-ா-ஸ்ரீ; சைவநெறி
முத்துநாயகமென்று திருப்பெயர் விளங்கிய

முத்துக்குட்டிப் புலவரவர்கள்

இயற்றியது.

இதனை
நாட்டரசங்கோட்டை
நகரத்தார் அவர்களால்

இரங்கோன்
20, 30வது கல்லி, ஏஞ்சலஸ் பிரின்டிங் ஓர்க்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.
துன்மதி௵ மாசிமீ

இப்பள்ளினைப் படிப்பவர்களும், ஷை அம்மனைத் துதிசெய்பவர்களும், சகலவினைகளும் நீங்கி புத்திர சம்பத்தும், தனகனகவஸ்துவாகனமும் தீர்க்காயுளும் பெறுவார்கள். அதெவ்வாறெனில் மேற்படி அம்மன் கிருபையால் அவித்தநெல் முளைத்து வருவதாலென்றறியலாம்

☞ அம்மன் பக்தராகிய சஞ்சீவிமலை சுவாமியாரின் தைலத்தின் சங்கதியை கடைசிபக்கம் பார்க்க.

உ

. கணபதி துணை.

கண்ணுடையம்மன் பள்.

காப்பு.

விநாயகர் தோத்திரம்.

விருத்தம்.

நீடுபெருஞ்செல்வம் நிறையுங்கலைவேழ்வி
நாடுபுகழ்கண்ணுடைய நாச்சியார்பள்ளிசைக்கே
ஏடுமெழுத்தாணியுமுன் னேந்துமகமேருவுந்தன்
கோடுமெனக்கொண்டமதக் குஞ்சரந்தாள் காப்பாமே.

பாயிரம்.

திருமாதிசைநாமகள் புவிமகள்செயமாதிவளாமெனவரிசைசெய்
சிவகாரணிநாரணி திருபுரைசெகன்மாதா
இருமாநிலமேலுயர் பனைசைநன்னகர்மேவியதேவிகண்ணுடையவ
ளெணையாள் பவள்மீதினிலினியபள்ளிசைகூற
அருமாமறைதேடியபொருளுயாருள்சேர்மகமாயிசந்நிதிதனி
லபிஷேகவிநாயகர் திருவரசடிவாழ்வாய்
வருமாதிவிநாயகர் வடதிசைவளர்தேசிவிநாயகரிவருடன்
வருமூவர்விநாயகர்துணை யெனமகிழ்வேனே (க)

நாலாசியசுருதிக்கண்ணுடையவள்
ஞானோதயசுருதிக்கண்ணுடையவள்
நாவாணர்சொல் நளினக் கண்ணுடையவள்
நலநீர்வாழ்
சேலாலுயர் கருணைக்கண்ணுடையவள்
சிதேவியென்னருமைக்கண்ணுடையவள்
சீர்பாடியபனசைப்பள்ளிசைதனிற்
றிசைகூர

சூளாயுதசிவசத்தியுடநிறை
சோதீசர்மெய்யருளக்கைதொழுதொரு
சூர்மாபுரம்நெரிபட்டுருவவிடு
சுடர்வேலோன்
மேலாமகள்பதிபுத்திரகுரமகள்
மேனுளரிகரபுத்திரவடுகையன்
வீரேஸ்வரனிவர்பொற்பதமலர்
மறவேனே (உ)

தடமும் மதமாதங்கமாமுகர்
தனிவெம்முனைவேல்கொண்டசேவகர்
தமதன்னையர் மூதண்டகோடிகள்
தருதாயா
ரிடமென்மனமீதென் றுவாழுமென்
னிருகண் மணியாய்வந்தபூரணி
இவள் கண்ணுடையாளன் புநீடுபள்
ளிசைகூற
மடல்வண்ணமும் வாசஞ்செய்தாமரை
மலர்மின்னலர்மேல்மங்கைநாயகர்
மணிவண்ணர்நம்மால்வெங்கடேசுரர்
மறைவேதா
வுடனின்நிசைநாமங்கைமாமதி
யொடுபன்னிருவோரென் றசூரிய
ருயர்விண்ணவர்சீர்தந்தநாவினி
லுறைவாரே (ந)

வியனன்புடையோருக்குமனதினில்
மிகநம்பினபேருக்குமினியசொல்
விளையுந்தமிழ்வாணர்க்குமனுதின
மெய்யருள்புரிவாய்
பயனுந்தியானக்கண்ணுடையவள்
பணிகின்றமெய்ஞ்ஞானக்கண்ணுடையவள்
பதபங்கயவேடிக்கையொடுபுகழ்
பள்ளிசெதனிலே
சுயமென்றடியேனுக்கும்வரவுயர்
துதிதந்தபராசத்திபதமலர்
துணையென்றவள்பேரைச்சொல்லியதொரு
சொல்லருமையினால்
நயமென்றெனதேழைச்சொல்வழுவினும்
நடுநுண்பொருளாணிச்சொல்லிதுமிக

நிலமென்றுரைபூரிப்பர்தமிழ்தெரி.
நல்லறிவினரே (௪)

கலிப்பா.

அன்னபரிபூரணிநல் லன்புடையாள்தென்பனசை
நன்னகர்வாழ்கண்ணுடையநாச்சியார்பண்ணைதனில்
வர்னமயிலுங்குயிலும் வந்தணைசேர்பள்ளியர்கள்
சொர்னமயமாகவந்த சோபனமுஞ்சொல்வேனே (௫)

பள்ளிகள் வருதல்.

கரும்படர் பூங்குழலுமன்மதவேள்
பொரும்பகழிபுதுமுல்லைச்சரமுந்
துடியிடையும் இடையிற்பட்டுடையும்
பிடிநடையொயிலும்
கரும்புருவச்சிலைகளுநெருங்கிய
குரும்பைகள் சாய்ந்திருந்ததுபோலெழில்
கனிந்திடுமூற்கனங்கொடுமெள்ளக்
குனிந்திடுதனமும்
அரும்புநகைபவளச்செவ்வாயு
மிரும்பையும்வட்டுருக்கையுமுருக்கும்
அஞ்சனக்கண்பார்வையுங்கழுத்தினில்
மஞ்சணைப்பூச்சும்
திரும்புதயில்சாயலுங்குயில்கள்
விரும்புகனிவார்த்தையுமிசையுஞ்
சென்னல்க்குடிமூத்தபள்ளிவந்துதோன்றினளே (௬)
மாந்தளிர்போல்மேனிபொன்னொளிவிடக்
கூந்தல்மழைக்கார் நிறங்காட்ட
மருக்கொழுந்தும்வேருமல்லிகையும்
சொருக்கினிலிலங்கக்
காந்தமலர்க்கரவளைகிலுங்கப்
பூந்துகிலினிடைதுவண்டசையக்
காலிலிடுபொற்பாடகஞ்சிலம்புக
ளோளிடநடந்து
மேந்திடுபன்னீர்மணம்பரிமளம்
சாந்துசவ்வாதுகள்கமகமென
மொழிக்குமொழிதேன்வரக்
குழல்மேல்விழிக்கயல்தாவ

பேந்துகொம்புக்கிணையெனவளர்ந்திரு
மாந்ததனச்குடங்களுங்குலுங்க
இலுப்பைக்குடியிளையபள்ளிவந்துதோன்றினளே (எ)

கலிப்பா.

உத்தமிமநோன்மணிகண்ணுள்ளமகமாயிபண்ணைக்
கொத்தடிமைப்பள்ளன் குடும்புசெலுத்துந்திறத்திற்
பத்தநிகமானதொழிற் பள்ளியர்கள் தங்கள்குடி
வர்த்தனையும்வந்த வரலாறு சொல்வேனே (அ)

சிந்து.

கனகன்வில்லிதன்வில்லைச் சனகன்மகள்பொருட்டாற்
காரானைபோல்வளைத்த ஸ்ரீராமனூர்
புனல்சூழிலங்கைசேனை முனைவாளாலமர்வென்ற
புகழைத்தமிழ்க்கடலாய் மகிழச்செய்தோன்
மனதுபூரிக்குங்கம்பர் பணைசைமாநகர்தேடி
வந்தநாள்முதற்பண்ணை சொந்தமுள்ளோன்
தினமுங்கண்ணுடையவள் தனதடியானுக்கேற்ற
சென்னெல்க்குடிமூத்தபள்ளிநானேயாண்டே (௯)

மலர்மாதுகண்ணுடையாளுலகின்றவட்குமுத்து
வடுகநாதேந்திரதுரை நெடுநாளைக்கும்
குலவுமிலுப்பைக்குடி நிலைமைசாம்பிராச்சியமாகக்
கொடுத்தநாளிற்குடும்பன்தொடுத்தபடி
கலனெகுறுணிவார்த்தை பலநாளிற்சேர்க்கச்சொல்லிக்
காணிக்குக்கொண்டானென்னை ஆணிப்பொன்போ
லிலகுமகமாயிபே ருளவுபண்ணைப்பள்ளனுக்
கிலுப்பைக்குடியிளையாள் நானேயாண்டே (௰)

கலிப்பா.

பள்ளன் வருதல்.

வண்டுகந்தசெந்தா மரையில்வந்தமாமயில்சொற்
கண்டுவந்தசொல்லுடையாள் கண்ணுடையாள்கோவிலுக்குப்
பண்டுவந்தவூர்முழுதும் பண்ணைவந்தநாள்முதலாய்க்
கொண்டுவந்தகண்ணக்குடும்பன்வந்துதோன்றினனே (௰௧)

தொண்ணூறுபொன்னேத்தியாய் வெண்ணீறணிந்தவாய்ப்புந்
தோளில்மண்வெட்டிக்கொட்டுந் துள்ளுமீசையும்
உண்ணவுண்ணமிகப்பேய்த் தண்ணீர்வெறிமயக்கம்
உருமால்க்கட்டுங்கொண்டையு மிருமாப்புடன்
நண்ணுமிடையில்நீல வர்ன்னக்கருங்கச்சையும்
நையாண்டிவார்த்தையுங் கொண்டொய்யாரமாய்க்
கண்ணுடையநாச்சியார் பண்ணையுளவடிமைக்
கண்ணக்குடும்பன்வந்து தோன்றினனே (௧௨)

விந்தைசேரிரணியன் மைந்தன்பிரகலாதன்
மிக்கபொன்மாபெலியுந் திக்காளும்நாள்
வந்தவேளாளருடன் மூந்துநாடுநகரம்
வடக்குவாய்ச்செல்லியற்கு நடக்கவென்று
சொந்தமானகிராமந் தந்துபெருநான்கெல்லை
சூலக்கல்லும்நாட்டியகாலத்திலே
அந்தநாள்முதலாய்வந் தெந்தநாளைக்கும்பண்ணை
அடிமைக்கண்ணக்குடும்பனுனேயாண்டே (௧௩)

நன்னிலம்புகள்தேவி சந்நிதிகும்பிடாரை
நாட்டில்வண்டிக்கிடாவாய்ப்பூட்டுமென்பேன்
இன்னமிவள் துணையென் றெண்ணிடாதவர்நெஞ்சை
யிருத்திமண்வெட்டிக்கொட்டால்த் திருத்திடுவேன்
அன்னைகலியாட்டத்தைச் சன்னைசொன்னவர்நாவை
அடுத்தபயிர்களைபோ லெடுத்தெறிவேன்
சொர்ன்னபயில்கண்ணுத்தாள் பொன்னடிவணங்காரைச்
சோறுதின்னிமாடென்று மாறுவேனாண்டே (௰௪)

கலிப்பா.

பொன்பெருகுசெல்வம் புனல்பெருகுவாவியுஞ்சூழ்
தென்பனைசைக்கண்ணுடையாள் தேவிதிருத்தாள்போற்றி
நன்பவளந்தேனொழுக நாட்டுவளம்பள்ளியர்சொல்
மின்பவளங் கேழ்க்கமன திச்சைவளந்தேறியதே. (௰௫)

நாட்டுவளம்.

பெய்யுமாரிநன்னீருள்ளநாடுபெருக்கமாவயலேருள்ளநாடு
பொய்யாமல்விளைசீருள்ளநாடுபுண்ணியப்பொருள்வேருள்ளநாடு
உய்யுமாதவத்தோருள்ளநாடுகண்ணுள்ளநாச்சியார்பேருள்ளநாடு
வைகாசித்திருத்தேருள்ளநாடுவடகலைவேள்விநாடெங்கள்நாடே (௰௬)

வெய்யசாபங்கடம்பவனத்தில்
   விடும்படிக்கொருவெள்ளானைபூசை
செய்யவேதிருக்கானைவனந்தேடிச்
   செல்லுமார்க்கத்திற்றீர்த்தமுமுண்டாய்த்
துய்யதோர்சிவ லிங்கங்கரிகால
   சோழன்கண்டிதை சோளீசரென்றும்
வைகைநாட்டிற் பிரதிஷ்டைசெய்த
   வடகலைவேள்விநாடெங்கள் நாடே (௰௭)

எந்தநாட்டிலும் ஏத்தமின்றென்று
   யேழூர்ப்பத்துக்கும் லெக்காயிருந்தோன்
அந்தநாட்டர் சன்றன்னரசுநா
   டாளும்நாளிலதிகாரங்கொண்டு
சொந்தநாட்டினிற் கோவிற்குளங்கொடி
   சூழுங்கோட்டை தன்பேரிட்டுண்டாக்கி
வந்தநாட்டரசன் கோட்டையுள்ள
   வடகலைவேள்விநாடெங்கள்நாடே (௰௮)

வாசமானதென்பாண்டிநன்னாடு
   மதுரைநாட்டில் வளருமின்னாடு
   காசினிக்குட் கதிக்கின்றநாடுமுன்
கம்பர்வந்து துதிக்கின்றநாடு
   பூசுரர்க்கன்ன தானஞ்செய்நாடு
புலவர்மேலபிமானஞ்செய்நாடு
   ராஜலட்சுமி கண்ணுடையாளருள்
நல்கும்நாட்டரசன்கோட்டைநாடே (௰௯)

நகரவளம.

சொல்லினாலிசைகொண்டநகரம் சுகிர்தவாவிகள் கண்டநகரம்
நெல்லினால்நிதி தேடும்நகரம் நிதியினால்தர்மம் நீடுநகரம்
ஈல்லவர்க்குமுகந்தநகரம் இளசைவாழ்வுமிகுந்தநகரம்
நல்லநாட்டரசன்கோட்டைஏழூர்நகரமெங்கள்நகரங்காணுண்டே (௨௰)

செம்பொன்வேதியர்மாதாபிதாக்குரு
   தெய்வந்தன்னை வணங்குவதல்லா
லின்பமாமுடி வேந்தரையும்புவி
   மீதில்வணங்காதநகரம்

கும்பிடுவோருங் கண்ணுடையாளைக்
    குடிவளர்க்குங் குலதெய்வமென்று
நம்பும்நாட்டரசன் கோட்டையேழூர்
    நகரமெங்கள் நகரங்காணுண்டே (௨௧)

சென்றுநற்குடிமாறனழைக்கச்
    சிறந்தகாவேரிப்பூம்பட்டணத்தி
லன்றிருந்துபொற்றேரேறிவந்தோ
    ரருவியூர்சுந்தரந்தன்னிளசை
யென்றுமென்றிலிளசையைஞ்ஞூற்றுவாழ்
    எழுமாநகர்வாழும்வணிகர்
நன்றிசேர்கண்ணுடையாளைப்போற்றும்
    நகரமெங்கள் நகரங்காணுண்டே (௨௨)

கண்ணினால்மதயானைரறுத்துங்
    கடலில்விட்டகனகமழைத்தும்
பண்ணுகந்தவைபாடலுகந்துநற்
    பந்தக்காற்குப்பவளம்நிறைத்து
விண்ணுயர்ந்தபொன்மேருவுரைத்துமுன்
    மீனவன்முடிசூட்டியுமெய்ப்பாய்
நண்ணுகீர்த்திபடைத்தவணிகர்
    நகரமெங்கள் நகரங்காணுண்டே (௨௩)

கற்றவர்புகழ்மூன்றுங்குலம்வாழ்கக்
    கம்பனூற்கோவிற்செம்பொன்னால்
சுற்றுமீரகத்தார் புனைமார்பு
    ருயர்ந்தசிங்கக்கொடிவிருதுள்ளோர்
சுற்றமாமறையேழுகற்புள்ளவர்
    துங்கமாமலைத்தேன்றுடையோர்
நற்றமிழ்கண்ணுடையாளைம்போற்றும்
    நகரமெங்கள் நகரங்காணுண்டே (௨௪)

தேட்டுகந்தவள் கண்ணுடையாட்குத்
    திருவிழாக்கலியாட்டஞ்சிறப்பு
பூட்டுதங்கத்திருவாபரணம்
    புகழ்திருப்பணிபூசையையும்
கூட்டுமெய்ப்பொருளானநகரம்
    குடகர்நாட்டில்வடகலைவெள்வி
நாட்டுகோட்டரசன்கோட்டையேழூர்
    நகரமெங்கள் நகரங்காணுண்டே (௨௫)

நீரெல்லாம்நின்றதாமரைக்கூட்டம்
நிலமெல்லாம்விளைநெல்மணிவீட்டம்
தேரெல்லாம்நவரத்தினசிங்காரம்
தெருவெல்லாந்திருத்தோரணவாரணம்
பேரெல்லாமுயர்கண்ணப்பன்கண்ணம்மை
பேச்செல்லாந்தேவிகாரணகாட்சி
பாரெல்லாம்புகழ்கண்ணுடையம்மன்
பணைசைமாநகரூரெங்களூரே (௨௬)

கச்சிருப்பதுமங்கையர்கொங்கை
கடனிருப்பதடுத்தோரைக்காக்கும்
குச்சிருப்பதுகோதையர்கொண்டையிற்
கோளிருப்பதுராசிகள்தோறும்
தச்சிருப்பதுகண்ணார்சேர்க்கையில்
தாழ்ந்திருப்பதுகூபந்தடாகம்
பச்சிளங்கிள்ளைக்கண்ணுடையம்மன்
பணைசைமாநகரூரெங்களூரே (௨௭)

தடையென்றுள்ளது வாழைமடற்குள்
தரிசென்றுள்ளது மாதர்சிலம்பில்
கடையென்றுள்ளது சந்தைவகுப்பில்
கலியென்றுள்ளது வர்த்தகர்பொன்னில்
கிடையென்றுள்ளது பாற்பசுக்கூட்டம்
கெலியென்றுள்ளது வன்கலிப்போரைப்
படையென்றுள்ளது பாலுடனன்னம்
பணைசைபாமாநகரூரெங்களூரே. (௨௮)

தீர்த்தச் சிறப்பு.

விண்டலம்பணி தேவிதிருக்குளம்
வீரகண்டான் மெய்ச்செங்கமலத்நான்
மண்டலம்பெறு தீர்த்தாகுளம்நல்ல
வாத்தியாரோடை நாயமாவாவி
எண்டிசைக்கு முயர்சொக்கனூரணி
யேழுதீர்த்தமுஞ் சூழுந்தடாகம்
கண்டுளமகிழ் நாட்டரசன்கோட்டைக்
கண்ணுடையவளூரெங்களூரே (௨௯)

காரணக்காரர்.

கனகமேவிய ராஜகரத்துடன்
கற்பகாலம் வளர்நகரத்தார்
பனசைநாட்டுள்ள நாட்டுக்கணக்குப்
பரம்பரம்வருந் தன்மகரத்தார்
தினமுகந்திடு நாட்டரசன்கன
செட்டிதேவன் செந்தலமெச்சும்
சனகராசன் கரியான்குளியான்
சதிரிலுள்ள வடக்குத்தெருவானும் (௩௰)
வட்டகைசூழும் பேய்வேட்டிகாளை
வலையரசன் வருங்கொல்லுகச்சு
திட்டவட்டஞ்செய் தேர்வேலைக்கொத்தர்கள்
சேரவேதிருநாள் மண்டபத்திற்
கட்டளைப்படி தீர்த்தந்திருநீறு
காரணம்பெருங் கண்ணுடையம்மன்
இஷ்டமாகிய நாட்டரசன்கோட்டை
யேழூர்க்குமுத லூரெங்களூரே (௩௧)

ஊர்வளப்பம்.

கொந்துலாவிய சூரக்குளம்புதுக்
கோட்டைபுல்லணி யிச்சங்குடியும்
ஐந்தருவும் வளரிலுப்பைக்குடி
ஆனைமாரியுடன்கடலாஞ்சி
வந்தனைசெய்யுஞ் செட்டிகுளஞ்சிறு
மாருவெட்டி பொன்னுங்குடிபத்தும்
இந்தவூர்முதல் நாட்டரசன்கோட்டை
யேழூர்க்குமுத லூரெங்களூரே (௩௨)
நீணிலம்புகழ் தெற்குத்தெருவில்
நிறைந்திருக்கு மல்லூர்பனங்காடி
சேணிலங்கும் புகழ்சூரைபத்தி
திகழுடைகுளஞ் செங்குளமாத்தூர்

வாணியங்குடி ஊத்திக்குளமெழில்
வாய்த்தவெள்ளஞ்செய்வேப்பங்குளமும்
காணிகொண்டருள் நாட்டரசன்கோட்டைக்
கண்ணுடையவ ளூரெங்களூரே (௧௩)

சோலையெங்கினும் வானரந்தாவச்
சுளைப்பிலாக்கனி மாலொடரம்பை
மேலதிர்ந்து விழுந்துசெழுங்கனி
விண்டுதேறல்கள் மேதியருந்தி
பாலளைந்து செஞ்சாலிவிளைந்து
பழனமெங்கும் பனிலமுலாவும்
வாலைசுந்தரி கண்ணுடையாள்பண்ணை
வாய்த்தசென்னல் குடியெங்களூரே (௧௪)

வெள்ளமேல்மிகத் துள்ளிடுமீன்கள்
விரிந்தகஞ்சஞ் சொரிந்திடுந்தேன்கள்
உள்ளிருந்து வெள்ளோதி பஞ்சேரு
முளவுசாலில் வளைகள்வந்தூரும்
பள்ளியர்கள் குறவைமுழக்கம்
பசிக்குஞ்சோலைக் கிளிக்கும் பழக்கம்
வள்ளிமாமியார் கண்ணுடையாள்பண்ணை
வாய்த்தசென்னல்க் குடியெங்களூரே (௧௫)

குங்குமங்கமழ் மங்கையர்கொங்கை
குடங்கள் கொண்டு குளிர்புனல்நீந்தும்
பொங்குதண்புன லோடைகொடிக்காற்
புறவும் நீள்வயற் பூங்காவனமும்
சங்கணிந்தவ தெரின்முன்னின்ற
தரளரசகசந்திரோதயங்காட்டும்
செங்கண்மால் தங்கை கண்ணுடையாள்பண்ணை
சேரிலுப்பைக் குடியெங்களூரே (௧௬)

பூவில்வண்டிக ளுண்டுகளிக்குநற்
பூங்குவாளைகள் தேன்கொப்பிளிக்கும்
மாவில்வாழ்குயில் மாரனைக்கூவும்
மருகில்வந்திளந் தென்றலுலாவும்
காவுநீர்கள் கமுகைப்பொருவுங்
கன்னலைப்பொருவுங்கதிர்ச்சென்னல்
தேவிகண்ணுடை நாச்சியார்பூம்பண்ணை
சேரிலுப்பைக் குடியெங்களூரே (௧௭)

கலிப்பா.

நற்றமிழ்சேர்கண்ணுடைய நாயகியாளென்னையருள்
பெற்றருள் சேர்நாட்டுவளம் பெறவிளங்கச் சொல்லியபின்
கொற்றமதவேள்குயிலைக் கூவாய்குயிலையென்று
உற்றதிருப்பள்ளியர்வந் துள்ள மகிழ்ந்தோதுவரே (௫௮)

குயிற்சிந்து.

சுகந்தமலர்ச்செழுங்கமலக் கண்ணுடையாள் சந்நிதிநற்
சொர்ணமயமாய்த்துலங்கக் கூவாய்குயிலே
மகிழ்ந்துசெய்யுங்கலியாட்ட வைகாசித்திருநாளும்
மாறாமல் விளங்கவென்று கூவாய் குயிலே
செகந்துதிக்குஞ் சிவன்கோயிற் கோபுரமுங்குறைமுடிய
திருத்தேர்கொண்டருளவே கூவாய்குயிலே
உகந்தபெருமாள்கோயில் திருமதிளுமண்டபமும்
உபயபூசைநடக்கக் கூவாய் குயிலே (௫௯)
வயனிருவர்பரவுமுத்து வடுகநாதேந்திரதுரை
மார்க்கண்டன்போலிருக்கக் கூவாய்குயிலே
உயர்குழந்தைத்துரையரசு அரசுகள்குமாரவற்கம்
உகந்துபெறவரந்தரவே கூவாய்குயிலே
தயவுள்ளமெய்ஞ்ஞானதுரை தர்மசமஸ்தானபதி
தழைத்தோங்கிவளரவே கூவாய் குயிலே
நயனிருகண்ணுடையவட்கு இலுப்பைக்குடியூர் கொடுத்த
ராஜசிங்கமிவனென்று கூவாய்குயிலே (௬௰)
படியிலுயர்வேதியரும் பசுக்குலமுமிசைக்கவிசொல்
பாவலரு மிகவாழ்கக் கூவாய்குயிலே
கொடியேற்றத்திருவிழா பரம்பரமண்டலபுருடக்
குருக்கள்வந்து நடத்தவே கூவாய்குயிலே
நெடியதடம்புவிவாழ்கத் தானதலம்பரிகலத்தார்
நிறைவாழ்வுபெற்றிருக்கக் கூவாய்குயிலே
அடியடிவாழைகளான அர்ச்சனைசெய்பாரசைவர்
அனைவோருமிங்கிருக்கக் கூவாய்குயிலே (௬௧)
சட்டமொடுமழைசொரிய ஊர்க்கிடையில் நிலம்விளையச்
சாணான் குளம்பெருகக் கூவாய்குயிலே
சிட்டர்புகழிலுப்பைக்குடி சென்னலக்குடிமுதலான
தேவதாயம்விளையக் கூவாய்குயிலே

அஷ்டதிக்கும்பிரண்டைக்குளம் பேய்வெட்டிகாளையுள
வடையோலைக்கதிகம்வரக்கூவாய்குயிலே
கட்டளையாய்த்திருவிழாக் காணிக்கைமூன்றுபணம்
கனிந்துதருங்குடிதழைக்கக் கூவாய்குயிலே (௪௨)

கதிரில்வரும்பயிற்பார்வை யெண்பதுக்கெண்பதுவரைக்கும்நவ
தானியங்கள் துகைபிறக்கக் கூவாய்குயிலே
கதிர்விளையும்பண்ணைமுதற் கட்டுக்கிடைஊர்க்கூர்நெற்
களஞ்சியமென்மேலும்வைக்கக் கூவாய்குயிலே
அதிகதிருவாபரணம் பூசைமிச்சம் வருஷமொன்றுக்
கையாயிரம்பொன்காணக் கூவாய்குயிலே
பொதிபொதியாயரிசிவிட்டுத் திருநாள்மண்டபம்நடத்தும்
புண்ணியர்கள்மிகவாழ்கக் கூவாய்குயிலே (௪௩)

தேவாதிதேவர்பணி கண்ணுடையவள்நாடு
தென்பனசையூர்செழிக்கக் கூவாய்குயிலே
பூவாசங்குலவு பஞ்சமாதேவிகுளக்குளம்
பூத்தகுடிபொலிபொலியக் கூவாய்குயிலே
கூவாணிவீருணிகண்டங்காத்தான் சோழன்
கோட்டைநிலஞ்சுதையாகக் கூவாய்குயிலே
நாவாணர்துதிசெய்யும் பெருமாளம்பலத்தாடி
நஞ்சைபுஞ்சை விளையவே கூவாய்குயிலே (௪௪)

கனவிசையரகுநாதச்சேதுபதி செய்தகொடிக்
கம்பமண்டபம்புகழக் கூவாய்குயிலே
புனிதமுறுசந்நிதிமுன் முகப்புமண்டபமுடித்த
புகழ்நகரத்தார்விளங்கக் கூவாய்குயிலே
தனதுயீஸ்வரவருஷம்புதுத்தேர் வைத்திடுநகரம்
தழைக்குமூரவர்வாழ்கக் கூவாய்குயிலே
மனமகிழுங்கோபுரமுங் கட்டிவைத்தவூர்வணிக
மகாராசர்குலம்வளரக் கூவாய்குயிலே (௪௫)

இலகுதிருவிளக்குபயம்நிலங்கொடுத்தோர்பணங்கொடுத்தோர்க்
கினியவரங்கொடுக்கவென்று கூவாய்குயிலே
பலவுபயம்நகைகள் திருப்பணிவுபயம்நடத்தினவர்
பலவுபயம்பெற்றிருக்கக் கூவாய்குயிலே
குலவுதனிற்கலியாட்ட முன்புகொடுத்தவரின்னங்
கொடுப்பவர்கள்குலம்வாழ்கக் கூவாய்குயிலே
உலகறியச்சூலம்போட் டபிஷேகப்பாற்பசுவிட்
டுண்மைசெய்தோர் நன்மைபெறக்கூவாய்குயிலே (௪௬)

திங்கள்தொறுமழைசொரியத் தேசமெல்லாமிகவிளையத்
தினமுமகவிலையேறக் கூவாய்குயிலே
எங்குநிலமானவடகலை வேள்விநாடுநகர்
ஏழூர்ப்பத்துஞ்செழிக்கக் கூவாய்குயிலே
சங்கநதிநாட்டரசன் கோட்டைவளர்நாடுநகர்
சகலசனமுந்தழைக்கக் கூவாய்குயிலே
மங்களகலியாணசுப சோபனம்பெற்றுலகேழும்
வாழிமிகவாழியென்று கூவாய்குயிலே (சஎ)

கலிப்பா.

மெய்யதிசேர்கண்ணுடைய வித்தகிபொற்றாள்பணிந்து
வையகமெல்லாஞ்செழிக்க மாரிதரவேணுமென்று
பையவரும்பச்சேரிப் பள்ளியரெல்லாங்குறவை
செய்யமகிழ்வாய்க்குடும்பர் செங்கைவெட்டுக்கூட்டினரே. (சஅ)

கன்னல்வளர்பனசை நன்னகருந்தவழ்
கண்ணுடையநாச்சியார் பண்ணைதனில்
மன்னுபுகழ்பெரிய சென்னல்க்குடிப்பள்ளரும்
வடிப்பமானயிலுப்பைக் குடிப்பள்ளரும்
இன்னிலமெல்லாமுள்ள மன்னிணைக்குடும்பரும்
இடங்கைவலங்கையுள்ளோ ரடங்கலுந்தான்
சென்னல்விரைப்பெடுத்து முன்னேசிறப்புவிட்டுச்
செங்கைவெட்டுக்கு நாளிட்டார்பாங்காகவே (சகூ)

திருக்குளம் வெட்டுதல்,

சித்தமுங்கண்ணுடையாள் சித்தமகிழும்பண்ணை
நீடுங்கலைவேள்விநன்னாடு தனிற்
கொத்தடிமைக்குடும்பரத்தனைபேரும்வந்து
கொட்டுங்குரவையுமுன் னிட்டுவரப்
புத்தப்புதுமதுவிற் பத்துலட்சங்கல்சம்
பூங்கோயில்முன்னிறைத்துச் சேங்கையிற்போய்
மெத்தமண்வெட்டிகொண்டு கூடைமண்ணெடுத்தேற்றி
மீண்டுவந்துகும்பிட்டடி வேண்டினரே (ரு௰)

கலிப்பா.

செங்கமலக்கண்ணுடைய தேவித்திருத்தாள் வணங்கித்
தங்கள்குடிச்செங்கைவெட்டுச் சட்டமுடன் செய்ததற்பின்
எங்குமொருநாளிட் டெருதுகட்டவேகுடும்பர்
அங்குமிங்குநாளிட் டகமகிழ்ந்துகூறினரே (ருக)

கிராம தேவதைகள்.

—o—

சிந்து.

வடிவுள்ளமகமாயியானகண்ணுடையவள்
 பதம்போற்றியே
வனசமாநகர் வேள்விநாட்டுள்ள
 பனசைமாநகர் காப்பவர்
குடிவளர்த்திடுங் கொட்டூருடையார்
 குருந்தூருடையார் சாக்கையன்
கூறும்பஞ்சமாதேவியுகந்த
 வீறுசேவக ராயற்கும்
படிபுகழ்ந்திடுமூருகாவலன்
 பஞ்சாக்ஷரமுள்ளவற்கும்
பரவுமோரம்பரக்கூத்துமெத்திசை
 பார்த்தபொய் சொல்லாமெய்யர்க்கும்
நெடியகரும்புதேங்காய்பூப்பழம்
 நிரம்பப்பூசைநடத்தியே
நிகரிலையனாரெருதுகட்டுக்குப்
 பகரும்நாளிட்டார்களே (௫௨)

தெள்ளுதமிழுக்குகந்ததேவி
 கண்ணுள்ளநாச்சியார் பண்ணையிற்
செய்யிலுகந்த சென்னல்க்குடியில்
 வெய்யிலுகந்த ஐயனார்
அள்ளலூரஞ்சேரிலுப்பைக்குடியில்
 ஆதனமழகையனார்
அங்குளளவர்க்கு மிங்குள்ளவர்க்கும்
 பொங்கலுமிட்டுப்போற்றியே
புள்ளிமருவில்லாததோர்கருந்
 துள்ளுமரியைப்பெலியிட்டு
புரவியெடுத்துக் குறவைமுழக்கிப்
 பூம்பந்தலின்கீழ் நிறுத்தியே
மெள்ளவேவலைப் பெரியான்கூத்துடன்
 மிகுந்தவேஷங்களாடவேம்
விருதுகட்டிமுன்னையனாற்கெல்லா
 எருதுகட்டினர் குடும்பரே (௫௩)

எருதுகட்டுசிறப்பு.

கும்புகட்டிய சேருடிக்குடை கொம்புகனகத்தப்புடன்
கண்ணக்குடும்பன் முதலானசில பண்ணைக்குடும்பர்சூழவே
கும்புகூடியவலங்கைவகுப்பிற் கூட்டங்கூட்டமாய்முன்வரக்
கொண்டாடிக்கொண்டுதீர்த்தந் திருநீறுண்டானபடிவாங்கியே
நம்பிரான்முன்னேநாட்டரசனும் நாலுகாரணக்காரரும்
நாச்சங்காளைவடம்வெட்டிக்கனபாச்சல்காட்டும் பறையெல்லாம்
சிம்புமெருதுவடந்தெர்ட்டிழுத்துக்கொம்புபிடித்துவிளையாடி
தெய்வச்சடங்குதுடங்கினபடிசிறந்ததிருநாள்நடந்ததே (௫௪)

கலிப்பா.

பூவில்மழைபெய்யப் புகழ்ந்தெருதுகட்டியபின்
காவியெனும்நீள்கருணைக் கண்ணுடையாள்கண்ணுடைய
தேவிகலியாட்டத் திருநாள் நடத்துதற்கு
நாவினுரைசொன்னபடி நாளிட்டாரூரவரே (௫௫)

சிந்து.

வித்தைக்குங்கனபுத்திக்கும்புகழ் மேன்மைக்குந்திறமானோர்
மிஞ்சினலடையாதகாவேரிப் பஞ்சினல்உடன்கண்டோர்
வர்த்திக்குங்கனசெட்டுளோர் முழுமாணிக்கப்பிச்சையிட்டுள்ளோர்
வழுமாநகர்மகராசர்களெழு மாநகர்வணிகர்
சித்திக்குங்கனிகண்ணுள்ள சிவ சத்திக்கன்புடைநிதமும்
தெட்டஞ்செய்திடும்பொருளாங்கலி யாட்டஞ்செய்திடவென்றே
யெத்திக்குந்திருமுகமேவிமுன் மெத்தைக்கும்புகழ்கூடி
வீடுகட்டியசெம்பொன்னூற்புது வீடுகட்டினார்மிகவே (௫௬)

கலியாட்டவீடுசோடித்தல்.

வீடுகட்டிவிலாசமாயதி னூடுசித்திரமெழுதி
விந்தையொத்தபொன்வாசலில்நிறைபந்தலிட்டலங்கரித்து
யேடுதொட்டெழுதாததாமரை தேடுதற்கரும்பொருளாய்
எங்கள்மெய்ப்பொருள் கண்ணுடையாளைத் தங்கள்மெய்ப்பொ
நாடுதற்கனுகூலமேமிக நீடுமெய்ப்புள்ளவணிகர் [ருளெனவே
நன்னகரங்களெல்லாம்வந்து பொன்னகரம்போலிருக்கக்

நோடுவைத்தபின்முலையாரன் போடுநிற்பதுபோல்
கூடுவாரிசைபாடுவார் விளையாடுவார் களிகூர்ந்தே (ருஎ)

கலிப்பா.

ஊரவர்களநாளிட் டுகந்தமணிப்பொன்னிலங்கக்
காரமிகுசெல்வக் கலியாட்டவீடுதனில்
ஆரமுலைமின்னார்கள் அம்மைபுகழ்பாடியபின்
கூறநிதம்வந்துமுளைக் கொட்டிவிளையாடுவாரே (ருஅ)

முளைப்பாட்டு.

கட்டழகியுத்தமியாங் கண்ணுடையநாயகிமேல்
இஷ்டமிகுசெந்தமிழாலின்பமுளைபாட்டுரைக்க
சிஷ்டர்புகழ்தென்பனைசைக் தேசிவிநாயகனார்
அஷ்டதிசைபோற்றுமத யானைமுகன்காப்பாமே

பூமடந்தைநாமடந்தை புவிமடந்தைபுகழ்மடந்தை
மாமடந்தையென்னவரு மலர்மடந்தைமாதரசி

மாதரசிவாழ்வரசி மண்ணரசிவிண்ணரசி
சீதரனார்சோதரியாந் தெய்வப்பிராமணத்தி

தெய்வப்பிராமணத்தி சீதேவிநாச்சியார்
மெய்வாய்த்தபூங்கரும்பு வெள்ளரியாத்தெள்ளமிர்தம்

தெள்ளமிர்தந்துள்ளமிர்தந் தேரப்பழுத்தகனி
பிள்ளைகளாய் மூவரையும்பெற்றெடுத்தபேடைமயில்

பேடைமயிலெனவிளங்கும் பேருள்ளபிடாரியம்மன்
ஊடுருவப்பார்வைசெய்யும் உண்மையுளோர்கண்டபொருள்

கண்டபொருளன்புடையோர் கருணைப்பெருக்காரு
தொண்டர்மனக்கோவிலுக்குத் தூண்டாமணிவிளக்காம்

மணிவிளக்காம்விலைமதியா மாத்தகதிகமானதங்கம்
பணிவிளக்காஞ்செம்மலைமேற் பச்சைப்படர்ந்தகொடி

கொடியிடையாள்பிடிநடையாள் கும்பிடுவோர் குலதெய்வமாம்
வடிவழகுபூத்தகடல் மலையரசன்வளர்த்தகிளி

வளர்த்தகிளிசமர்த்திமகள் வள்ளியம்மைமாமியார்
முளைத்தெழுந்தகணபதிக்கு முருகனுக்குமொருதாயார்
ஒருதாயாரிவளெனவேஉலகமெல்லா மீன்றகன்னி
விருதுமயிடேசுரனை வென்றருளும்வீரசத்தி
வீரசத்திவீரதுர்க்கை வேதாளக்கொடியிடையாள்
பராசத்திகோரருத்திரி பரமசிவன் கண்ணாட்டி
நாட்டிலுயர்கலைவேள்வி நாடுடையாள்நகருடையாள்
தேட்டிலுயர்வணிகருள்ள தென்பனசைமாநகராள்
மாநகராள்பாரசைவர் வங்கிஷமேபூசைசெய்யும்
நானிலஞ்சேர்பூலோக நாயகியாங்கண்ணுடைய
கண்ணுடையநாயகிக்குக் கண்குளிரப்பார்த்திருக்கும்
எண்ணரியநவநிதியும் இசைந்துவைத்தபொக்கிஷமாம்
பொக்கிஷஞ்சேராபரணம் புதுவயிரத்தேர்திருநாள்
மிக்கபொருளுள்ளதெல்லா மிகத்தேடிவைத்தவர்கள்
வைத்தவர்கள் முத்தமிழைவளர்த்தவர்கள் மரபுடையோர்
எத்திசையுங்கொண்டாடும் ஏழுநகர்வாழ்வணிகர்
வாழ்வணிகரம்பலமும் வளர்குடியும் புலகிளையும்
சூழ்வணிகரூரவர்கள் சொன்னபடிநன்னயமாய்
நன்னயமாய்க்கலியாட்டம் நடத்துதற்கு நாள்குறித்து
மின்னுமணிக்கலியாட்ட வீடுகட்டவேணுமென்று
வேணுமென்றுநாட்டவரில் மிக்கானகிளைப்பிரிவில்
காணிகொண்டுமதுவெடுக்குங் கன்னியர்கள்மனைதனிலும்
மனைதழைக்குமூர்க்கணக்கன் மகிபாலன்மனைதனிலும்
அனுதினமுந்திருப்பதி ஐய்யங்கார்சொற்படியே
சொற்படியேயங்குமிங்குஞ் சுபதினத்தில்தறசைசெய்து
விற்பனஞ்சேர்கண்ணாளன் விஸ்வகுலதெய்வதச்சன்
தச்சப்பிச்சஞசாரி தனதுகொலுச்செல்லனுந்தான்
வச்சிரமணிமாளிகையாம் வாசலிலேநடைகூடம்
கூடநின்றமுகூர்த்தமிட்டுக் கோடிபொன்னேத்திசெய்து
நீடியபூம்பந்தலிட்டு நிறைமலராலலங்கரித்து
அலங்கரித்ததருமனையி லம்மனைபோலுருவெழுதி
துலங்குதெருவீதியெல்லாந் தோரணங்கள்மிகநிறைத்து
நிறைத்துவரும் விபவுஸ்ரீ நிறைத்தகலியாட்டத்துக்கு
விருதுரைக்கும்பதின் மூன்றும்விக்கிரமவருடமதில்

வருஷமுதற்றிங்களென வந்தசித்திரைமாதம்
திருவளரேழாந்தேதி சேருமுதற்செவ்வாயில்
வாய்த்ததிருக்கோயிலுக்கு மற்றுமுள்ளகோயிலுக்கும்
சாத்தெண்ணெயமுதுபடி சகலசிறப்புங்கொடுத்து
தன்னகரிற்பெண்களெல்லாந் தயிலமிட்டுநீராட்டி
பொன்னுடைமைபொற்புடவை பூஷணங்கள்மிகப்பூண்டு
நளபாகமாய்ச்சமைத்த நல்லமுதுகறிவகைகள்
வளமானபோசனங்கள் வற்கவகைதானருந்தி
பங்கயம்போல்முகமலர்ந்து பாக்கிலையுந்தான்பருகி
குங்குமமுஞ்சந்தனமுங் குழைத்துமிகப்பூசி
தென்னீரிலேவிளைந்த சீரகச்சம்பாவிரையாம்
தொண்ணூறுகோட்டைவிரை சொரிந்துகடக்கத்தளந்து
கொட்டுமுழக்குடனே குறவையிட்டுக்கோயில்முன்னே
சட்டமுடன்கொண்டுவந்து தளவிசையின்மேல்விரித்து
விந்தையுடன்சந்நிதியில் வீரபட்டன்மனமகிழ்ந்து
சந்தனம்விபூதிதரச் சகலசனமுந்தரித்து
காதலுடன்மீளவந்து கலியாட்டவாசலிலே
கோதையர்கள்சேரமுளைக்கொட்டி விளையாடுவரே

(தானானே தானானே தானானே தானானே.)

நல்லதொருசெவ்வாய்க்கி நாலாநாள்வெள்ளிதனில்
மெள்ளவந்துவாரியதை விரைகளெல்லாங் கோட்டைகட்டி
உற்றபெருந்திருக்குளத்தில் உள்ளபடிநனையவைத்து
மற்றவெள்ளிக்கைந்தாநாள் வருமிரண்டாஞ்செவ்வாயில்
நனைத்தவிரைதனைச்சொரிந்து நாச்சியார்மண்டபத்தில்
கனர்தபுங்கள்குழைமேலே கன்னியர்கள்தெளித்தனரே
உம்பருடன்தெளித்தமுளை உத்தமிகண்ணுள்ளவளை
நம்பினவர்கிளைபோலே நாளுக்குநாள்வளர்ந்ததுவே
முந்து முளைவளர்ந்ததற்பின் மூன்றாஞ்செவ்வாய்தனிலே
வந்து முளைவாரியதை மறுதளத்தின் மேல்விரித்து
செவ்வாய்க்கிநாலானாள் தெள்ளியதோர்வெள்ளிதனில்
கொவ்வையிதழ்மின்னார்கள் கூடிவந்துமுளைவாரி
கண்டிருகண்களிகூர்ந்து கலியாட்டவாசலிலே
கொண்டுவந்துமாவெடுத்துக்குடத்திலிளநீர்பெருக்கி

தேனைக்கலந்தெடுத்துத் திரைவளைத்துப்பானைவைத்து
பானைக்குமூன்றுசிறுய் பக்கமதில்வைத்திடவே
புனிதமுள்ளதேவிமதுப் பொங்கிவழிந்திடுமாம்
இனியதொருசுபதினத்தில் இருபத்திரண்டாநாள்
நறுமணங்கள் கமகமென நாலாஞ்செவ்வாய்தனிலே
பிறிதியுடனொருசோட்டுப் பெண்களெல்லாம் நீராடி
பட்டுடுத்திப்பணிபூண்டு பரிமளங்கள் கமகமெனப்
பொட்டுமிட்டுக்கலியாட்டப் புதுவீடு முன்புவந்து
நெடுநிலத்தொரதிசயிக்க நிறைந்திருக்குமதுக்குடத்தை
நடுவிருக்குமொருகுடத்தை நாச்சியார்குடமெனவே
முறைமுறையாய்த்தெண்டனிட்டு முதல்மதுவைத்தானெடுத்து
நிறைகுடங்களாயிரமாம் நீலக்குடமாயிரமாம்
சிறுகுடமும்பெருங்குடமுஞ் செம்பொற்குடமாயிரமாம்
நிறுக்கவொண்ணுவெள்ளிக்குடம் நீலக்குடமாயிரமாம்
பச்சைக்குடமாயிரமாம் பவளக்குடமாயிரமாம்
இச்சைப்படியொருகோடி யினியமதுக்குடம்வரவே
பேரிகையும்பூரிகையும் பெரியதவில்மத்தளமும்
வீராணம்பதினெட்டு மேளவாத்தியமுழங்க
நடக்குமுயர்சங்கீதம் நடநாடகசாலை
இடைக்கியங்களாலவட்டம் இசைந்த குடைக்கவரிகுஞ்சம்
மதயானைமனுவரசு மண்டலிகர்புடைசூழ
பதினாயிரந்தீவட்டி பகல்வத்திநின்றிலங்க
சாந்தொடுபன்னீர்சுகந்தஞ் சாம்பிராணிகமகமென
பூந்துகிலின் பாவாடை பொரிவாணம்பூச்சிதற
செகராசர்மகிழ்வணிகர் தெருவீதிதனைச்சூழ்ந்து
மகராசிகண்ணுடையாள் மதுகுடங்கள்வந்ததுவே
ஊரணிக்குட்பெலிபீடம் ஒத்தைபனையடியில்
வாரணைத்தகொங்கைமின்னுள் மதுக்குடங்கள் வந்ததுவே
சொன்னபடிதிசைநோக்கித் துள்ளுமரிப்பெலிகளிட்டு
சன்னிதிமுன்வந்துநின்று சாம்பிராணித்தூபமிட்டு
பத்துலட்சங்குட்டிவெட்டிற் பனியளவுகுருதியுண்டோ
மெத்தப்புதுமையென்று விண்ணவர்பூமலர்சொரிய
கண்ணுடையாள்திருவிருப்பிற் கண்ணுடையாள் மதுக்குடத்தை
கண்ணுடையாள்முன்புவைத்துக் கன்னியர்கள்போற்றுவரே
வடக்குவாய்ச்செல்லியம்மை மாதாவே பூசைகொள்வாய்
அடைக்கலங்கள்காத்திடுமென் னுத்தாளே பூசைகொள்வாய்

பூசைகொள்வாய்பூசைகொள்வாய் பூங்குயிலே பூசைகொள்வாய்
ஈஸ்வரியேபூசைகொள்வா யென்றுமிகவேபணிந்து
நாலுதிக்குஞ்சனங்கள்வர நகரமெல்லாஞ்சூழ்ந்துவர
வாலிபமாய்மங்கையர்கள் மனையில்வந்தார்சோபனமே
பார்வாழி சந்நிதிமுன் பரிகலமுந்தான்வாழி
சீர்வாழிபேர்வாழி தென்பனசையூர்வாழி
மனுவாதசேருமுத்து வடுகனுதேந்திர துரை
அநுதினமும்புலிபுரக்க அரசுபெற்றுவாழியதே
சாலகுணமதியூகி தாண்டவராயேந்திர துங்கன்
புகழ்வளரமதிவளரப் பூவுலகில்மிகவாழி
வாழிமிகநாடுநகர் வாழ்வணிகர் கிளைவாழி
வாழிமுளைத்தமிழ்வாழி வாழிமிகவாழியதே (ருசு)

முளைப்பாட்டு-முற்றும்.

கலிப்பா.

தாயினுமெய்யன் புளதாய் தண்ணளிசேர்கண்ணுடையாள்
கோயில்முளைப் பாட்டுரைத்துக் கொட்டிவிளையாடியபின்
வாயிதழ்செந்தேனொழுகவாலிபர் மின்னார்வகுப்பில்
ஆயிரம்பேர்கும்மியடித் தன்பில்விளையாடுவரே (சுயி)

கும்மிப்பாட்டு.

ஆகுமிதோழிப்பெண்ணே
அலங்காரக்கும்மி தோழிப்பெண்ணே
நீகுமிதோழிப்பெண்ணே அடி
நீயென்னைவெல்வாயோ தோழிப்பெண்ணே
செந்தாமரைத்திருக்கண்ணுடையா-ளம்மன்
சீதேவிமேற் கும்மிப்பாட்டுரைக்க
கொந்தாருங்கூந்தல்மடவாரே—யிங்கே
கும்மியடிப்போம் வாருங்கடி
கும்மியடித்துக்கவி படித்து நாமே
கோயில்க்கலியாட்டவாசலிலே
ரம்மியமாகவிளையாடினல்—மிக
நன்மைதருவாள் கண்ணாத்தாளடி

கண்ணாத்தாளைப்போலேதெய்வமுண்டோ—அவள்
    காரணக்காட்சிபோல் காட்சியுண்டோ
விண்ணாட்டிலுள்ளவர்காணாலு—மிந்த
    மெய்பதியுண்டோடி தோழிப்பெண்காள்

மெய்யதுசொன்னால்மலைபோலே—பெண்காள்
    வேடிக்கைசொற்னச்சிலைபோலே
ஆய்யவள்கண்ணுடை நாச்சியார்—புகழ்
    சொல்லத்தொலையாது தோழிப்பெண்காள்

சொல்லச்சொல்லவரும் நாட்டமடி—வந்து
    சூழும்வெகுசனக்கூட்டமடி
செல்வதுரைச்சி கண்ணாத்தாளுக்கு—மனத்
    தேட்டமெல்லாங் களியாட்டமடி

தேட்டமெல்லாங் கண்ணாத்தாய்மேலே—அவள்
    சித்தமெல்லாமிந்தச் சேய்மேலே
தோட்டமெல்லாமலர்கொய்தெடுத்து—நாமே
    சூட்டுவோம்வாருங்கள் தோழிப்பெண்காள்

சூட்டவுமல்லிகைப்பூவிருக்கும் தீர்த்தத்
    தொட்டியெடுத்தொருமாவிருக்கும்
கூட்டுறவாய்த்தென்னங்காவிருக்குந்—தேவி
    கோவிலடையாளம் பாருங்கடி

கோவிலுடையாள்குணமுடையாள்—பொன்னின்
    கோபுரவாசல் வளமுடையாள்
தாயிலும்நல்லவள் கண்ணுடையாளெழு
    தாரணிகாணியுடையாளடி

காணிக்கிவாய்த்தமகராசி—தெய்வக்
    கன்னிச்சிஞானக்கருமறத்தி
மாணிக்கச்செட்டிச்சி கண்ணாத்தா—ளிந்த
    வையமெல்லாம்பெற்றமாதாவடி

மாதாவென்றால் மனதானவளே—சிவன்
    வாழ்வுதருமலைமானிவளோ
சூதாசனத்தின கண்ணுடையாளன்பு
    சொன்னால்வெண்தாமரைமின்னாளடி

மின்னெநமக்கென்னகாட்சியடி—இனி
    மேலும்வரும்பொருளாட்சியடி

கண்ணாலேகாண்கலாங்காட்சியடி—கண்ணுத்
தாயாரேபூலோகசாட்சியடி
பூலோகமானதோர்கொங்கையடி—புவி
பூத்துமுதிராதான் தங்கையடி
கோலாகலமலர்மங்கையடி—அம்மன்
கோதண்டபாணியார் தங்கையடி

கோதண்டமாமலர்வாளியடி—அண்ட
கூடமிவள்பதத்தூளியடி
மூதண்டபத்திரகாளியடி—அம்மன்
மூவர்க்குந்தான்முதலாளியடி

தான்முதலாளியாய்வந்தாளடி—வந்து
தந்தியைக்கந்தனைத்தந்தாளடி
வான்முதலாயுள்ள கண்ணுடையா-ளிங்கே
வந்தாள் நம்மையுகந்தாளடி

நம்முலகெங்கும் நடுநீரில்-வைத்து
நனைத்தநெல்லுமுளைப்பதுண்டு
அம்மனதிசயங்கண்டியளே-வெந்நீ
ரவித்தநெல்லுமுளைக்குதடி

நெல்லுமுளைக்குங்கலியாட்டந்-தனில்
நேர்ந்துவிடுங்கள் துள்ளுமறி
சொல்லுமுன்வந்து பெலியிடவே-யொரு
சொட்டத்தனைரெத்தந்தோணுதடி

தோணுமல்வீட்டினில்வைத்திருந்து-பெண்கள
சோடிப்புக்கேழ்க்கக்கொடாதபொருள்
காணமற்போகவுங்கண்டிடவுந்-தேவி
காரணங்காட்டவுங்கண்டமடி

கண்டுகண்டுள்ளங்களிகூர்ந்து-தேவி
கண்ணுடைநாச்சியார்காரணத்தை
அண்டர்முனிவர் நவநாதிசித்தர்க
ளாராறிவாரடி தோழிப்பெண்காள்

ஆரறிவாளிவள்நீதியடி-கலி
யாட்டத்திருநாள் முன்னுதியடி
சோறுமனத்தாள்விரோதியடி-அம்மன்
தூணிலுதித்தசெஞ்சோதியடி

தாணைத்துரும்பாகவாட்டுவதும்-பின்
துரும்பைத்தூணாகநாட்டுவதும்
காணப்புதுமைகள் காட்டுவதும்-தேவி
கண்ணுடையம்மன்கடாக்ஷமடி

கண்ணுடையம்மன் கருணைவைத்தாற்பண்டு
காய்ந்தமரமுங்கனிசொரியும்
பெண்ணுடனும்பெறுவார்கள்-அம்மன்
பேரிடப்பேரிடப்பிள்ளையடி

பேரிட்டக்கும்மியடியுங்கடி-சற்றும்
பிந்தாமற்கும்மியடியுங்கடி
நேரிட்டுக்கும்மியடியுங்கடி-பெண்காள்
நித்தமுங்கும்மியடியுங்கடி

நித்தமுங்கண்ணுடைநாயகியை-உங்கள்
நெஞ்சகந்தன்னில் நினைந்துகொண்டு
வைத்தனைக்கும்மியடியுங்கடி-நல்ல
வடகலைவேள்விநாட்டுப்பெண்காள்

நாடுநகரமும்பொன்னாலே-வரும்
நாலுர்ச்சனங்களும்பொன்னாலே
ஆடல்பாடலும்பொன்னாலே-கலி
யாட்டப்பூமணிபொன்னாலே

பூவிரிபந்தலும் பொன்னாலே-கண்டு
பூசிக்கும்பேர்களும் பொன்னாலே
தேவிமதுக்குடம்பொன்னாலே-வைத்த
தென்னம்பாளையும் பொன்னாலே

பொன்னணிபூங்கோயில்கண்ணுடையாளம்மன்
பூங்கோயில்வாழிபுகழ்வாழி
நன்னுடுவாழ்நகர்வாழி-அம்மன்
நாட்டரசன்கோட்டைவாழியதே (௬௧)

கும்மிப்பாட்டு முற்றும்.

கலிப்பா.

தண்டாமரையுகந்த தாயிலுங்கண்ணுள்ளவளைக்
கொண்டாடிக்கொண்டுபெண்கள் கும்மிவிளையாடியபின்
கண்டார்மனங்குளிரக் காசினியெல்லாந்தழைக்க
உண்டாய்மழைக்குறிக ளுள்ளதெல்லாந்தோன்றியதே (௬௨)

மழைக்குறி.

மூடுபனிமழைவந்து சாடுதுகுறிகாண்-வாயில்
முட்டைகொண்டுசிற்றெறும்புசட்டியேறுது
நீடுமதிதன்னிற்பரி வேடமிடுது-சூகை
நிரையிட்டகுளிவாயிற்கரைகட்டுது
கூடுதொறுங்கிடந்தன்றிற்பேடுரைக்குது-மின்னற்
கொங்குமீனமுமெதிர்த்திட்டெங்குமின்னுது
தேடுபொருள்கண்ணுடையாள் நாடுதழைக்கப்-பண்ணைச்
சேரிப்பள்ளரெல்லாமினிப்பூரித்திடுமே (௯௫)

சந்ததமுந்துணையென்றுவந்தவர்க்கெல்லாம்-நல்ல
தாயாநிசருவலோகநாயகியெனும்
அந்தரிகண்ணுடையவள் சிந்தைமகிழும்-பண்ணை
அன்னக்கொடிகட்டிவளர் சென்னல்க்குடியும்
பிந்தாதயிலுப்பைக்குடி யெந்தவூரிலும்-வெள்ளம்
பெருகிமறுகால்விட வருகுதுமழை
சொந்தமானபண்ணையாண்டைக் கிந்தவயணம்-நாமே
சொல்லவரும்பண்ணைப்பள்ள ரெல்லவருமே (௯௬)

கலிப்பா.

கண்ணுடையதாயார் கலியாட்டங்கொண்டருளும்
தண்ணளியுமெய்யருளாள் தாய்முகங்காணுஞ்சேய்போல்
பண்ணைமுகங்காணப் பயிர்முகம்பூரித்தெழும்பி
மண்ணுலகெல்லாஞ்செழிக்க மாரிசொரிகின்றதுவே (௯௭)

நீலமுகில்கள் வடக்குவாய்ச்செல்லி
கோலமேனிபோலுருக்கொண்டு
நிரந்தரமாகப்பொதிகைவரைமேற்
பறந்திரைந்துநீர்சொரிந்திட
வாலைகோமளமகமாயிகையிற்
சூலாயுதம்போல்மின்னியே
வழக்கஞ்சேர்கலியாட்டப்பேரிகை
முழக்கம்போல்மேகங்குமுறியே
பாலலோசனைகருப்புவில்லினைப்
போலேவானிலேவில்விட்டுப்

பத்துத்திசையும்பறந்துகாலூன்றி
மெத்தத்தானேகெம்பீரமாய்
ஞாலம்புகழக்கருணைக்கண்ணுள
நாச்சியார்திருவருளைப்போல்
நதிசெய்வெள்ளம்பெருகிவார
அதிசெயம்பாரும்பள்ளீரே
செகந்தழைக்தருள்குருஞ்சிபுகுந்து
குகன்றிருப்பதம்போற்றியே
சிறந்துபாலையிலுறைந்துகண்ணுள்ள
தெய்வத்தைமனமேவைத்து
சுகந்தண்முல்லையில்முகுந்தன்மருந்தாற்
றுகந்தபகவானெய்தலிற்
சொன்னவருடன்றன்னை வணங்கிச்
சின்னவயிரத்திருக்கைமீன்
பகர்ந்தகெளிறுமசரைதேளி
பஞ்சிலைகொண்டசினைவரால்
பருமீனுஞ்சிறுமீனுங்குதிக்கப்
பரிந்துகண்ணுளவம்மனைப்
புகழ்ந்திடும்புலவோர்கள்மனையில்
மிகுந்திடுஞ்செல்வம்வருதல்போற்
புதுமழைவெள்ளம்பெருகிவருகும்
புதுமைபாரும்பள்ளீரே (கூ௭)

கலிப்பா.

வட்டநெடுவாவிகுளம்மாரிசொரிநீர்பெருகித்
திட்டமதுகண்டுநல்லதேவிபண்ணையுள்ளதெல்லாஞ்
சட்டமிடவென்றேதனித்துநகரத்தார்கள்
கட்டளையாய்வைத்தபண்ணைக்காரன்வந்துதோன்றினனே (கூ௮)

பண்ணைமணியக்காரர் வருதல்.

விக்கல்மிடறுங்குதிரை மொக்கணிவாயுங்-கூன
வில்லுப்போல்முதுகுஞ்சுக்கான் கல்லுப்போற்பல்லும்
முக்குறுணிசோறடையும் பக்கவயிறும்-பரு
முட்டுவாயில்மீசையி லேமெழுட்டுமயிருங்
கொக்குப்போல்நரைத்தலையுஞ் சிக்குநாற்றமு-மாறு
குண்டுகண்ணுந்தன்னிலேதான் கண்டுமகிழ்ந்து

திக்கரசிகண்ணுடையாள் மிக்கபண்ணையில்-நாளுஞ்
சேரளந்தகோவில்ப்பண்ணைக் காரனார்வந்தார் (சுகூ)
சாணுக்கொருபொய்யனாரே கும்பிடுகிறோம்-கோணத்
தடிக்கம்புக்கையனாரே கும்பிடுகிறோம்
தாணுக்குங்கால்நீண்டவரே கும்பிடுகிறோம்-வங்கு
சொரிபத்தி ஆண்டவரே கும்பிடுகிறோம்
வீணுக்குவீண்பேச்சனாரே கும்பிடுகிறோம்-குல்லா
வேடிக்கைக்கைவீச்சனாரே கும்பிடுகிறோம்
ஆணுக்குளழகனாரே கும்பிடுகிறோம்-பண்ணை
ஆண்டவரே அடியார்கள் கும்பிடுகிறோம் (எ0)

கலிப்பா.

நம்புபண்ணைக்காரன் நயினார்வந்தாரெனவே
கும்பிடுமுன்கண்ணைக் குடும்பனைக்கண்டேகோயிற்
கெம்பரைநெல்கட்டுக் கிடைவிரைநல்லோர்வகுப்பிற்
சொம்புடனே சொல்லெனவே தொழுதுபள்ளன் சொல்வானே (எக)

சிந்து.

விரைவகுப்பு.

சொரிகுரும்பைநெல்லீர்க்குச்சம்பாவெள்ளைத்
துய்யமல்லிபொற்பாளையுண்டக்கார்
விரிசைகொண்டகொசும்பாக்கல்லுண்டை
வரகஞ்சம்பணவாரிவாலான்
நரியிரங்கலும் நானூறுகோட்டைநெல்
நாட்டரசன்கோட்டைக்கண்ணுடையாள்
பெரியபண்ணைக்கிசைந்தவிரைகள்
பெருக்கமாய்வைத்திருக்கிறேனாண்டே (எஉ)

மாட்டுவகை.

கெட்டைக்கொம்பன் குடங்கொம்பெருது
நெடியவாலான்பனங்காய்மயிலை
சட்டைக்கேத்த கருமறைக்காளை
தளப்பன்போரெரு நல்லியன்காளை
கட்டக்காளையுங் கண்டதைஞ்ஞூறுண்டு
காளைக்கோன்கிடைக் காராம்பசுவும்

மாட்டுக்காளையுங் கொட்டியமாடும்
வகைக்குநூறு துசைப்படியாண்டே (எ௩)
விண்ணுளோர்பணி கண்ணுளதெய்வத்தை
மெய்யென்றெண்ணுத வீணர்கள்நெஞ்சில்
எண்ணுமைக்கானக் கட்டியைப்போலே
யிருப்புக்கட்டிகரைத்தகொளுக்கள்
கண்ணிலேகண்ட தொண்ணூறுமேழி
கலப்பையேர்க்கால் வடமும் நுகமும்
பண்ணையேர்க்குள்ள சோடினையெல்லாம்நான் (எச)
பத்திரம்பண்ணி வைத்தேன்காணண்டே

கப்பாலி.

கோட்டைநெல்லுமாடுங் குடும்பன் வகைகூறியபின்
மீட்டுமந்தப்பண்ணை விசாரிப்பான்மெய்ப்பாகத்
தேட்டமொடுகண்ணுடையாள் தேவிவயலாடுவைக்க
ஆட்டிடையரைப்போ யழைத்துவாவென்றுரே (எரு)

ஆட்டிடையன் வருதல்.

நீட்டுறமுந்தேட்டுறமும் நெல்லுறமுமாகையினல்
ஆட்டுறமு காட்டுறமும் வயலுறங்காணண்டே
வயல்முழுது முள்ளவாட் மடைமுழுது முடையவள்
செயல்முழுதுங்கொண்டு நான் சீரிடுவேனண்டே
சீரிடுவேன் கண்ணுடையாள் சென்னல்க்குடிவயல்முதலாய்
எரிமுன்னூறுமெத்த யினிவருவேனண்டே
வருவேனென்றுரைத்தபடி மகிழ்ந்தாட்டுப்பட்டி கொண்டு
குருவார நாள் கண்ணக் குடும்பனும் வந்தானே (எசு)

கலிப்பா

தண்ணமிர்தங்கண்ணுடைய தாயார்கிராமமெல்லாம்
நண்ணுவயலாடுவைக்க நாட்கொண்டுதான்குடும்பக்
கண்ணனெதிற்சொன்னநயங்கண்டிடையர் சேரவைத்துக்
கிண்ணிவந்தாராட்டுக் கிடையும்வந்து சேர்ந்தவே (எஎ)
கதிக்குங்கோளிற்குடியான்பேய்வெட்டி
காளைக்கோனுங் கனதுகை ஆடும்
குதிக்குஞ்சேரிளங் குட்டியுங்குட்டி
குடாப்புடன்கிடைக்காலுந்தான்கொண்டு
துதிக்கிணங்கிய கண்ணுடையாள்வயல்

சூழ்ந்தபண்ணைத்தொழிலிச மானி
    மதிக்கவே ஆட்டுப்பட்டிக்கொண்டிப்போது
வந்தார்கள்கோன்கள் வந்தார்காணுண்டே (எஅ)
    பச்சைமாமயில் கண்ணுடையாட்குப்
பரம்பரம்வரும் பண்ணைக்கிராமம்
    மெச்சு சென்னல்க் குடியிலுப்பைக்குடி
மீதமுள்ள வயல்நிலமெல்லாம்
    நிச்சயஞ்செய் திடையர்வகுப்பில்
நித்தம் நூறு கிடையாடமைத்தே
    இச்சையாயிரு பத்தொருநாள்வய
லெல்லாம் நானுற மேத்தினேனுண்டே (எகூ)

கலிப்பா

இப்படியேபண்ணைவய லெல்லாமுறமேத்திக்
செப்பமிகுகண்ணுடைய தேவிபண்ணைக்கேற்றதொரு
கப்பலென்னவந்தபண்ணைக் காரன்மகிழ்ந்திருக்க
அப்போதுபஞ்சாங்க அய்யங்கார்வந்தாரே (அ௰)

பஞ்சாங்க ஐயர்வருதல்.

தேவமந்திரி வியாழபகவான்
    திராணியுள்ள திருப்பதி அய்யன்
நாவலர்முதற்புகழ்ந்திடுங் கண்ணுள
    நாயகிவயல்நாளே ரிடவே
மேவும்வெள்ளிநற்பஞ்சமிபூசம்
    மிதுனலக்கினவேளைநல்வேளை
ஏவுமென்னக்குடும்பணைப்பண்ணையா
    னின்றுநாளேரிடென்றுசொன்னாரே (அக)

நீலப்பேர்.

சீருகந்தவள் கண்ணுடை யாட்குத்
    திருவிளை யாட்டஞ் சென்னற் குடியில்
சாருகின்ற பெரிய செய் பள்ளச்செய்
    சம்பாச் செய்யுடன் வானங்கமேடும்
காருலாவு மிலுப்பைக் குடியிற்
    கருப்புக் காலும் வாதஞ் செய் சம்பாச் செய்

சுருமம்நிலம் ஏகமும் நாத்தங்கால்
எங்கும்நாளேரிடென்று சொன்னாரே (அஉ)

கலிப்பா.

அச்சுதனார் தங்கை யென்னை ஆளவந்த கண்ணுடையாள்
வச்சிரமணி போல் விளையும் வாய்த்தவயலுள்ளதெல்லாம்
உச்சிதமாய் நாளேரிட்டுள்ள பண்ணைப்பள்ளரங்கே
மெச்சு பண்ணைக்காரனுக்கு மீண்டுவந்து சொல்வானே (அங)

சிந்து

வரைமாது கண்ணுடைய தேவி—பெரும்பண்ணை
வயலில்நாளேரிடவே—நிரவி
விரை வாகடுரங்கள் செல்லும்போது—தனித்தனியே
மெய்நிமித்தங் கண்டது பொய்யாது
நிரையான வலங்காடனிடமும்
ரெட்டைப் பார்ப்பாரும் பாற்குடமு—மங்கே
நிரையாக வந்தது காணரே—நல்ல
நிரை விளைச்சல் விளையும் நயினாரே (அச)

மன்னிணைப் பள்ளருள்ள தெல்லாங் கூடி—ரெண்டேர்க்கும்
வயலுக்கும் நூறேர் பரந்து பூட்டி
முன்ன முன்னே திசை நோக்கித்—தொழுது பளை
முதற்கரை பிற்கரை முழுதும் உழுது
நன்னயமாய் வரப்பு வெட்டி யிருத்திக்—குளை மிதித்து
நாளுளவில் பறம்படித்துத் திருத்தி
சொன்னபடி கேழ்க்க வென்று மீண்டோ—மிது சமயந்
தொளிகளெல்லாஞ் சமைந்தது காணுண்டே (அரு)

கலிப்பா.

சுத்தனிவனென்று பண்ணைக்காரன் வகை சொன்னபடி
கொத்தடிமைப் பள்ளரெல்லாங் கோவில் வயலத்தனையும்
உத்தமி கண்ணாத்தாள் உலகமெல்லாந் தன் கருணை
வித்து விதைத்தாற்போல் விரை விரைத்து வந்தாரே (அசு)

தினைக்குங் குறவர் மணைக்குந் தொழிலாய்த்
திரியும் பிள்ளையைப் பெற்றவள்
செல்வக் கண்ணுடை நாச்சியார் புகழ்
திருவிழாக் களியாட்டத்தில்

முளைக்கண்டுடனே அவித்த நெல்லுமுளை
முளைக்க வைத்த சீமாட்டிக்கு
மூன்றுங்கொம்பி னனைத்த விரைநெல்
முளைப்பது மெத்த அருமையோ
[illegible]ரும் விரையத்தனையுங் குடும்பன்
நாத் தங்காலில் விரைத்த பின்
நருந்தண்ணீர் விட்டுப் பருவஞ்செய்திட
நல்ல நாச்சியார் கண்ணம்மன்
தனைக்கண் குளிரப்பூசிக்குஞ் சிவ
சைவரும் பாரசைவருஞ்
சார்ந்த கிளையும் வளர்ந்தாற் போல் வயல்
சேர்ந்த முளைகள் வளர்ந்ததே (அஎ)

அக்கணிந்த வருடனடம்புரி
முக்கணம்பிகை யென்னவே
அடையாளத் திருவடிவு கொண்ட கண்
ணுடையாளைத் தொழுமன்பர்க்குப்
பக்குவம் பெரும் வடிவும் வயது
மக்களுங் கிளைவர்க்கமும்
பாலும் பண்ணையு மேருஞ்சீரும்
பசுவும் வளர்ந்து வருதல் போற்
திக்கினிலுள்ள சீடுக்காடைகள்
தக்க மணிப்புரா தன்னுடன்
சேருஞ் சிறகிமாடப் புராக்கவு
தாரி தன்னுடன் கூடியே
கொக்கின முதற்குருகினம் வந்து
பொகினந் தெரியாமலே
குளந்தண்ணீர் குளிர் தாமரை போலே
வளர்ந்த நாத்தும் வளர்ந்ததே (அஅ)

கலிப்பா.

சொல்லருமைக் கண்ணுடையாள் துய்யமலர்த்தாள் பணிந்து
வல்ல பண்ணையாண்டை மகிழ்ந்துரைத்த சொற்படியே
எல்லவரும் பள்ளச்சேறி யெங்குமுள்ள பள்ளியர்கள்
நல்லதினந் தன்னில் வயல் நாத்து நடச்சென்றாரே (அகூ)

நாத்து நடுகை.

(தினதினனா — தினதினனை — தினதினனை — தினதினை.)

மிகுந்த நகரக் குடிக்கு மூர்க்கு
மிகுந்த புவிக்குங் காவலாய்
மேல் முகந்தன்னில் வடக்கே முகமாய்
வீற்றிருந்து தன்னூரிலே
பசுர்ந்ததோடகங் காச்சல்கருப்புப்
பஞ்சம் படை வராமலே
பக்கத்துணை நின்றடைக்கலங்காக்கும்
பாதுகாப்பிச்சியானவள்
முகந்தனுக் கிளையவள் கண்ணுடையாள்
மகிழ்ந்திடும் பண்ணை வயலுள்ளே
முளைத்த நாத்தை வளைத்துப்பறித்து
முடி கட்டிக் குடும் பேத்தவே
வருந்து முதலைப் பருந்து வயலில்
புகுந்து மிகவும் நடுகைக்கு
வண்ணப்பள்ளிகள் வந்தார்கள் கன
பண்ணைப்பள்ளிகள் காணுமே (௬௰)

சீதளமலர்க் கண்ணுடையவள்
பாத தாமரை போற்றியே
செனனல்க் குடியு மிலுப்பைக் குடியும்
சிறந்து பள்ளிகள் நிறைந்து தான்
ஆதரவுடன் வெய்யிலுகந்த
ஐயனார் கோட்டூருடையவர்
ஆதனமழகையனார்க்கும்
அதிக பூசை நடத்தியே
போதை மகிழ்ந்து கண்ணக் குடும்பன்
புள்ளிப் பள்ளருங் கூட்டிப் போய்
பொருந்து கள்ளுடன் சாரயப்படை
திருந்து குடந் தொட்டருந்தியே
மாதிரந்தரும நாத்துமுடியை
வைத்து வணங்கி வானுள்ளே
மடவாருங் கண்டு மகிழவே நாத்து
நடவாரும் வாரும் பள்ளீரே (௬௧)

விரும்பு கானையில் வாள் மேல்நடந்தான்
 வீருவாகை புல்வாயம்மன்
விளைபனங்குடி பெரியநாயகி
 வெத்தியூரணி அம்மனும்
அரும்பொருளுருவாட்டிப் பெரியாள்
 அடுத்தமங்கலந் தன்னில்வாழ்
அரியவளிவளாறு பெண்களுக்கும்
 பெரியவளார்க்கும் பெரியவள்
பெரும்புவி யெல்லாம் பெற்றவளென்னைப்
 பெற்றதாய் கண்ணுடையவள்
பேரிற்பள்ளிசை பாடியே பண்ணை
 யூரிற் பள்ளிகளெல்லோரும்
குரும்பையசையக் கரும்பு கனியக்
 குரவை முழக்கி விளையாடி
கோவில் நாத்து நடுகைக்கே கனி
 வாயில் வாழ்த்தும் பள்ளீரே (௬௨)
நகர்குலதெய்வங்கண்ணுடையவள்
 நாச்சியார்க்குப்பரம்பரம்
நடக்குந்தேவதாயமுழுதும்
 நன்னாட்டுவரிபலவரி
சகலவரியும்பருவரிமெத்தத்
 தலத்தீவரியுந்தள்ளியே
சருவமானியசம் பளமாகச்
 சாம்பிராச்சியப்பட்டடையந்தந்தோன்
மகராசன்முத்துவடுகனுதேந்திரன்
 வளர்சமஸ்தானந்தழைக்கவே
மதிமந்திரியான தாண்டவராயன்
 மார்க்கண்டனைப்போலிருக்கவும்
செகமெல்லாம்வளர்ந்திடவுந்தேவியைத்
 திக்குநோக்கிமுன்கும்பிட்டுத்
திரைத்தசென்னெல்நடவாரும் வாரும்
 உறத்தபண்ணைப்பள்ளீரே (௬௩)
சினத்தைவென்றவர் தமக்கோரடிமை
 செகத்துளோர்க்கொருபொதுப்பிள்ளை
செந்தமிழ்முத்துநாயகம்பர
 தேவதாய் துணையென்னவே

கிளைத்திருக்குமைந்தெழுந்திருலது
　　தனக்கிருப்பிடமெனவே
பஞ்சின்மேல்வைத்தகல்லுங்கறும்
　　பஞ்சின்மேல்வைத்தபூப்போலே
கனத்திடாதுவந்துதவியறிவின்
　　மனத்திடமயங்காமலே
கருணைமருந்தால்நெஞ்சடைப்டையுங்
　　கைவலியையுந்தீர்த்தவள்
புனத்தினங்கிளைக்கயற்கண்ணுடையாள்
　　தனத்தினந்திசைநோக்கியே
போற்றிசெய்தவள் புதுமையைச்சொல்லி
　　நாத்துநடுங்காண்பள்ளீரே (௩௪)

அன்னப்பெண்பிள்ளை அழகுசொரியச்
　　சொர்னப்பெண்பிள்ளைபாண்டியன்
அருமைப்பெண்பிள்ளை கண்ணுடையவள்
　　பெருமைக்கிசைந்தபண்ணையாம்
சென்னல்க்குடியில் மறக்குப்பான் செய்யில்
　　சேர்ந்தகோவில்வாசற்செய்
திருவியாரசெய்யும் அரசடிசெய்யும்
　　சிறுசம்பாநாத்துநடச்செய்தே
பொன்னைக்கண்டதுபோலேகுடும்பன்
　　தன்னைக்கண்டொருபண்ணையான்
பூராயத்துடன்வரையிலேயவன்
　　சாராயக்குடிவெறியிலே
சன்னகும்பிடுபோலவேயொரு
　　சின்னக்கும்பிடுபோட்டதுமவன்
சாய்பையும்பள்ளனைய்ப்பையுங்கொளி
　　வாய்ப்பையும்பாரும் பள்ளீரே (௩௫)

ஆதிரைத்திரு நாளுளோர்க்கொரு
　　சோதிரத்தினமாய்வந்தவள்
அன்னபூரணிகண்ணுடையவள்
　　ஆளுஞ்சென்னல்க்குடிதனில்
மாதிரத்துடனழகன்வயக்கல்
　　மாவடிச்செய்கல்லஞ்செய்
வாய்த்தகண்ணுடையாள் வயக்கலும்
　　வானங்கமேடும்நடச்செய்தே

பாதிரிப்பூவைப் பரித்துப்பரமி
சாதிரைக்குள்ளேமறைத்திட – பூதைப்
பள்ளன்கையிலே தாவென்றானவ
ளுள்ளங்கையிலே பூவென்றாள்
ஏதிருக்குது சொல்லென்றானவள்
மோதிரக்கையால் நில்லென்றாள்
இதத்தையும்வெகு விதத்தையுங்கேளி
மதத்தையும் பாரும்பள்ளீரே (கூசு)

வரிச்சிருக்கமுன் கூரைவெந்திட
மணக்கிளப்பம் வராமலே
மகிமைசெய்துநல் வரஞ்செய்கண்ணுள
மகமாயிபுகழ் வளர்ந்திட
விரிச்சநெட்டிலே கதலிகமுகு
விளங்குஞ் சென்னல்க்குடிதனில்
வெட்டுச்செய்யுடன் பிள்ளைவயக்கல்
பொட்டச்செய்யிலும் நடச்செய்த
நரிச்சியென்கிற மூத்தவள்பள்ளப்
பெரிச்சியுண்கிறசோற்றிலே
நண்டாணத்தைவிட்டிட்டினனவள்
சொண்டானிலக்கள்ளை மூட்டினாள்
சிரிச்சுக்கொண்டவன் சிறுபள்ளியெளி
ப்ரிச்சுக்கொண்டாந்த கறியெல்லாம்
தின்றுதந்திட மென்றுதிங்கிற
சிங்காரம்பாரும் பள்ளீரே (கூஎ)

அருந்தவப்பொருள் கருணைக்கண்ணுடை
யம்மனைத்தினம்பூசிக்கும்
அருமைநம்பியான் வீரபட்டனுக்
கர்ச்சனைபாகம்பலதலை
திருந்துபிச்சுடையான் செய்நல்லியர்
செய்விளாவடிச்செய்யுடன்
சிறிசெய்நல்ல கோப்பன்செய்பெருந்
திருவியார்செய்யும்நடச்செய்தே
குருந்தநிலக்கையி லுச்சியேபள்ளப்
பெருந்தனுக்குள்ளமெச்சியைக்
கூப்பிட்டகுறல் கேட்டதேயவள்
காப்பிட்டகையாற் காட்டவே

மருந்தனப்படி நின்றுவளரப்
        பெருந்தனப்படியென்றதும்
மச்சானும்பயலொச்சானுஞ்செய்யு
        முச்சாயம்பாரும் பள்ளீரே   (௬௮)

வடகரைப்புலி சசிவர்னமுத்து
        வடுகனுத்துரைச்சிங்கம்
மாநிலந்தருந்துரைக்குவேண்டிய
        மைந்தனைத்தருமகமாயி
கடகளிற்றனை முருகனைத்தருங்
        கண்ணுடையவள் வயலுள்ளே
கருப்புக்காலிடை தாரைக்காத்தான்
        காலாங்கரைச்செய்நடச்செய்தே
மடவானைத்திரள் நடைப்படித்திட
        வருஞ்சென்னல்க்குடிப்பள்ளியும்
மலர்பொற்கொடிசே ரிலுப்பைக்குடியில்
        வாய்த்தபள்ளியும் நேத்தியாய்ப்
பிடவைகட்டிநல் லுடமையிட்டதைப்
        பேச்சிலேசொல்லும்வற்கமுந்தனப்
பெருக்கமுங்கிளை நெருக்கமும்பள்ள
        னுருக்கமும்பாரும் பள்ளீரே   (௬௯)

அரம்பையர்க்கணங் கரசிகண்ணுடை
        யம்மனுக்குள்ள சொம்மெனும்
அதிகபொருள் சேரிலுப்பைக்குடியில்
        அரமனைதனிற்கட்டளை
பரம்பரம்வருமுத்துநாயகம்
        தினம்பெருதனதும்பளம்
பதிங்கலவிரைப்பறவி லும்நல்ல
        பண்ணைநாத்து நடச்செய்தே
வரம்பருகிலே பள்ளியைக்கண்டு
        பரம்பொருபிறந்தள்ளியே
வள்ளக்கையிலே கால்வைத்தானந்தப்
        பள்ளப்பயலேமேல்வைத்தான்
பிறம்பானமுகி வலுக்கிறுளவள்
        பேத்தியுமுலேதுலேக்குருள்-மெத்தப்
பிலுக்குருள்வளை சிலுக்குருள்முத்துக்
        குலுக்குருள்பாரும் பள்ளீரே   (௭௦)

மதிக்கும்பணைசைப்பதிக்கும்புவிக்கும்
மதிக்கும்பொருள் கண்ணுடையவள்
மன்னினைப்பொருளினுப்பபைக்குடியில்
மகிழும்நாட்டுக்கணக்குடன்
துதிக்கும் அம்பலந்தலத்துக்காவல்
சுயம்பாகம் வயிராவிகள்
தோப்புப்பண்டாரதலத்தார் நிலத்தில்
வாய்ப்புக்கண்டு முன்னடச்செய்தே
பதிக்கும்நாத்தை மிதிக்குஞ்சேற்றிற்
பரப்புப்பள்ளிகள் நடுவிலே
பக்கப்பார்வை அடக்கிக்கடைக்கண்
பத்தியாயந்தக்கெண்டையைக்
குதிக்குங்கெண்டையதென்னவேவயல்க்
குருகினங்கண்டுண்ணவே
குடும்பன்கச்சால்க்கொண்டரிக்கிறானந்தக்
கோமளம்பாரும் பள்ளீரே (௩௫)

வளளிக்கொடிநன்கருணைக்கண்ணுள
மகமாயிபுகழ் வளர்ந்திட
வாய்த்தபண்ணையில் குடியானமேகங்
காத்தவராயனுளவுதான்
சொல்லிற்பெரியசாணன்குளத்தில்
துதிசெய்யுங்கணபதிசெய்யும்
துலங்குகண்ணுடையாள் வயக்கலும்
சூழ்ந்தநிலங்கள் நடச்செய்தே
நெல்லிக்காய்முலைசெல்லிக்காய்ப்பள்ளன்
அல்லிக்காய்பரித்தெரிந்ததும்-அதை
நெடும்பிச்சிகண்டு பரித்ததுமதை
குடும்பிச்சிகண்டு மறித்ததும்
சல்லிப்பேச்சிலே சொல்லிக்கேழ்க்கிறான்
நல்லிக்கிச்சொன்னசாரமும்-விப
காரமும் உபகாரமும்-பச்சா
பாரமும்பாரும் பளளீரே (௩௬)

கொட்டிவைத்திடு திரவியம்போலே
செட்டிமக்களை வளர்ப்பவள்
குவளைக்கண்ணுடையவளைப்பணிந்து
குலவஞ்சாக்கூர் வயலுள்ளே

நட்டிளைத்துவிடாதிருத்தலும்
நாச்சியார் செய்பொட்டச்செய்
நாயக்குடியில்ப்பொத்தக்கண்ணன்செய்
நாலுபொருளும் நடச்செய்தே
கட்டிகட்டியாய் விளைந்துடைந்திடுங்
கனிப்பிலாக்களையினிப்பிலே
கலிச்சியுஞ்சின்னப்பிலிச்சியுமந்தக்
களப்பஞ்செய்திளங்குரும்பைமேல்
எட்டியெட்டிமுன்னரிந்தசேற்றை
யிருளக்குடும்பன் துடைக்கப்போய்
எலுமிச்சம்பழமதுக்குருனந்த
வலுமிச்சம்பாரும் பள்ளீரே (௩௩)

தளத்தில்வருமண்டலிகர்வெப்புலி
தாண்டவராயத்தளசிங்கம்
சலுகைக்காரி உலகைவளர்த்த
சமர்த்தி கண்ணுளநாச்சியார்
குளத்திவயலி அழகன்வயக்கல்
கூறும்நாச்சியார் செய்யுடன்
கொத்துக்கணக்கன் சிறுகுளந்தனில்
குண்டச்சன் தழைநடச்செய்தே
வளத்துடன்வரும்பெருமையைக்கண்டு
மனஞ்சகியாமற் பொருமியே
வலியவந்து விளாத்தக்குடியில்
மடைதிறந்து நல்லுவச்சன்செய்
முளைத்தண்ணீர்விட்டு முனியக்குடும்பன்
இளைத்துவாரானென்றேச்சல்லோ
மோரைக்கேழ்க்கிறுப்போலேரெண்டிள
நீரைக்கேட்கிறுன் பள்ளீரே (௩௪)

படைக்கும்புவனப்பரப்பும் நிரப்பும்
பகிரண்டமும் பெற்றெடுத்தவள்
பனசைப்பதிநன் கண்ணுடையவள்
மனதுக்கிசைந்தவயலுள்ளே
இடைக்கிடைபெரும்வட கொருக்கையில்
ஏகாலிச்செய் செய்க்கெல்லாம்
ஈடுகட்டிய நாச்சியார்செய்யும்
காடுவெட்டியும் நடச்செய்தே

உடைக்கும்வாய்மடையடைக்குங் குடும்பன்
உளவுபண்ணைவயலுள்ளே
உச்சிதப்பள்ளிகள் நடுகைச்சிந்துகள்
ஒருமித்தின்பமாய்ப் படிக்கையில்
அடைக்கிநாத்தினன் கடைக்கண்ணோட்டத்தில்
ஆள்ப்புள்ளிமெள்ளப்பார்க்கிருள்
அதுக்கல்லோ கண்ணக்குடும்பனிற்கிருன்
ஓதுக்கிலேபாரும் பள்ளீரே (௱ரு)
வாரைப்புனைந்துநடத்தினளெழு
பாரைப்புனைந்து நடத்தினள்
வடக்குவாய்ச்செல்லி கண்ணுடையவள்
மகிழும்பண்ணை வயலுள்ளே
நாரைக்குலஞ்சேர் சூரைக்குளத்தில்
நாச்சியார் செய்தனுடன்
நாவிதன்தளைபுல்லனூர்வயல்
நாலுபொருளும் நடச்செய்தே
சீரைப்புகழ்ந்துபடிக்கையிற்பள்ளன்
சிறுபெண்கள் கும்மியடிக்கையில்
செட்டிகுளத்து அழகன்வயக்கல்
சேர்ந்தபிள்ளையார்தளையுமாய்க்
கோரங்கிழங்குகளையெடுக்கிற
குமரிப்பள்ளிகள்நெளிப்பையும்—மஞ்சக்
குளிப்பையுமனக்களிப்பையும்பரி
மளிப்பையும்பாரும் பள்ளீரே (௱சு)

கலிப்பா.

மாத்ததிகமான தங்க மாநிதிகண்ணுள்ளவளைப்
போற்றிசெய்யுமன்பர் புண்ணியம்வேரூன்றுதல்போல்
நாத்துநடவெங்குமவர் நன்மனம்போலேகரைத்த
சேற்றில்நடவேரூன்றிச் சேரவளர்ந்தோங்கியதே (௱எ)
சிறுமைப்படாததெண்டங்தெரித்து
அடிமைப்படவந்தவர்க்கெல்லாம்
செல்வமும்பரகெதியும்வாழ்வும்
செம்மைப்படுத்தி மேன்மைக்குள்
மறுமைக்குந் துணையாகவந்தவள்
வடக்குவாய்ச்செல்லி பண்ணைக்குள்

வயலினிற்களை தழையவே பெண்கள்
மதிமுகக்களை விளையவே
நறுமைக்கும்வளைகளை பரப்பியே
நாலுதிக்குள்ள செய்க்கெல்லாம்
நல்லநாச்சியார் கண்ணுடையவள்
நளினமலர்த்தாள் நம்பினோர்
வெலுமைக்கலியைப்பிறவிக்கடலை
வினைதுன்பங்களைப் பிணிகளை
வேருடன்களைடுயெடுத்தாற் போற்களை
ஆருடனெடுத்தார்களே (௩அ)
நதியணிந்தவருடனடர்புரி
நாச்சியாரருள் வேண்டியே
நாட்டமுங்கலியாட்டமும்பொரு
ளீட்டமுங்கொடுப்பவர்க்குக்
கதிதருந்திருச்சந்நிதிதணி
லெதிர்தருந்திருநீறெனும்
கர்ப்பந்தரித்தநாள் முதல்வந்து
கெர்பந்தரித்துக்கிளைக்கெல்லாம்
நிதிதரும்பொருள் விளைந்திடமனை
நிறைந்தமக்களைப் பெறுதல்போல்
நெடியசாலிகள் கருக்கொண்டுகதிர்
நின்றுநித்தமென்னம்மனைத்
துதிசெய்யும் புலவோர்கள்பணையி
லதிசெயம்பெருஞ் செந்தமிழ்
சொல்விளைந்தது போலவேவயல்
நெல்விளைந்ததுகாணுமே (௩௯)

கதிரறுத்துக்கண்டுமுதல்.

கலிப்பா.

சீருகந்தகண்ணுடையாள் தேவிதிருத்தாள்போற்றிக்
காருகந்தபண்ணைக் கதிரரியவேணுமென்று
பாருகந்தபள்ளரெல்லாம் பண்ணையாள் சொற்படியே
நீருகந்தபூங்கன்னி நிறைந்துவந்துகூடினரே (௪௰)

சிந்து.

கரியமாலயனிமை யவர்கள் புகழ்
கண்ணுடையவள் வயலுள்ளே

கனபள்ளருடன் பள்ளிகள் வந்து
கதிரரிந்துபின் கட்டியே
வரிசையான கட்டெடுத்துக் களத்தில்
மலைகள் போலே போர் வைத்து
மகிழ்ந்து கொத்தரி லிலவுகுறித்து
மறுநாட் கழித்துச் சூடெல்லாம்
பரிவுசேர் சிவபத்தி யில்லாமல்
திரியு மானிட மிருகமாய்ப்
பருங்கிடாக்கள் போற் கருங்கிடாக்களைப்
பலபிணையலாய்ப் பூட்டியே
பெரியசூடுகள் நூறு ஐம்பது
பிரித்தடித்து வைக்கோலையும்
பின்பு தள்ளியே நெடும் பொலிதொடும்
கும்பு செய்தனர் குடும்பரே (௬ஸக)
நாலுதிக்கிலுங் குவித்த பொலியை
நன்ருகப் பொலிபொலி யென்றே
நடந்து பள்ளர்கள தற்றவேமலர்
மடந்தை கண்ணுடையவ ளெனும்
வாலை சுந்தரி பதம் வணங்காத
மக்கள் பதராய்ப் பிறந்திடும்
மனிதப் பதர்க ளென்னக் கலந்து
மணிநீர்ப்பதரை நீக்கியே
கோலாகலமா யளந்து நாச்சியார்
குருணி ஐயனார் குருணியும்
கொத்துப் பிடிகள் பெருங்கங்காணம்
குள வெட்டுப் பல சுவந்திரம்
சோலி யுள்ளது மணியங் கணக்குச்
சொன்ன கங்காண முன்னுக்குத்
துகையிட்டளந்தார் பண்ணை நெல்லெல்லாம்
வகையிட்டளந்தார் குடும்பரே ௬ஸஉ
உலகில் மிகக்கண்ணுடைய வாதிரு
உண்மை மகிழும் பள்ளிகை
உரைத்த தமிழ்க்குத் திருக்கை விளக்கம்
உம்பளம் நிலம் சம்பளம்
நலம்மிகுந்திருநாள் கடலைகள்
நடக்குமவரிசைநடக்கவே

ராசகர்த்தார் நகரமூவர்
நாலுகாரணவகுப்புள்ளோர்
பலசனங்களுந்தரும் பொன்பூஷணம்
பணங்கள்கடுக்கன் மோதிரம்
பட்டுப்பட்டாங்கு பாதிரைதலைப்
பாகுதுப்பட்டி பாற்பசு
விலையுயர்ந்த நெல்நவமணிகன
வெகுமதி வந்துகுவிந்தாற்போல்
விளைந்தநெல்ப்பொலிகுவிந்திடப்பொலி
யளந்தநெல்ப்பொலிகுவிந்ததே. (௯௰௩)

கலிப்பா.

மாதாவாங்கண்ணுடைய மாமயிலைப்போற்றிவய
லாதாயமுஞ்செலவும் அம்பாரநெல்வகையும்
காதாரக்கேட்கமுகங் கண்டுபண்ணைக்காரனிடம்
நீதானுரையெனவே நின்றுபள்ளன்சொல்வானே (௯௰௪)

சிந்து.

சென்னல்க்குடியிற்பெரியசெய்வகுப்பில்
வைகாசிமாதத்தைத்
திருநாள்க்கட்டளைக்கிருநூற்றிக்கலம்
ஒருநாள்ப்போலளந்தேன்
சொன்னசிலவுக்கின்னம்வேணுமென்றே
நூற்றிக்கலநெல்
சொரிகுரும்பையும் நரியிரங்கலும்
வரியனுக்களந்தேன்
இருப்புக்கால்கொண்டு கருப்புக்கால்விளைநெல்
உச்சிக்காலத்துக்கெழுநூற்றிக்கலம்
ஈர்க்குச்சம்பாநெல்முழுமூச்சாயளந்தேன்
திருப்பணிவேலைக்கருப்புக்கட்டி
விலைவிருண்டிவயல்ச்-சிறுமணியனில்
மருவில்லாநெல்லும்குருவையுமளந்தேன்
குடதிசைக்கரையணையடைத்திடவுங்-நடுக்
குளங்கடைக் கொம்புக்கும்சென்னல்க்
குடிக்கணமாய்க்கும்-நம்பிக்கையாகப்
பணவிலைப்படி-மணவாரிப்பொலியில்நூற்றிக்கலநெல
பட்டர்பங்குடன் குள வெட்டுக்கூலி
ஓட்டருக்களந்தேன்

கெம்பீரத் துடனம்பாரக் கிடையில்
இலுப்பைக்குடிக்குங்
கீழக்கண்மாய்க்குங் கிணறுவெட்டிக்கும்
வாழைத்தோப்புக்கும்
சொம்பாகம்விளை சம்பாச் செய்ப்பொலியில்
கூலிப்பள்ளுக்கும்
தொண்ணூற்றிக்கலங் துய்யமல்லிநெல்
எண்ணிக்கொண்டளந்தேன் (௱௰௭)
அருமைத்தாயார்மேற் பெருமைப்பள்ளுரைத்த
புலவருக்குநான்
ஆத்திதூத்தி நூற்றிக்கலநெல்
சோற்றினுக்களந்தேன்
குருவுக்கென்றுபின் னிருபத்தைங்கலநெல்
அடிமைத்தனத்திற்
கொண்டுபோய்வைத்துக் கண்டுவணங்கிக்
கும்பிட்டுக்கொடுத்தேன் ௱௰௮
வெண்பிரைத்திருவேணிநாரணியாம்
கண்ணுடையவள்
மிக்கபண்ணைக்கு வேண்டியவிரை
வர்க்கமுள்ளதெல்லாம்
பண்புடன்வகைக் கெண்பதுகோட்டை
விரை ஆகவிரைகள்
பட்டடைபதினலிலும்விரை
கட்டினேனாண்டே (௱௰௯)
அம்மனுக்குள்ளசொம்மிலுப்பைக்குடிக்-கோவில்க்கெம்பரை
ஆரிலுமூவாயிரத்தெழுநூறுக்கட்டுக்கிடை
நம்பிடகள்ளன்மேய்ப்புலிவாசல்ப் பெரியகெம்பரை
நாலிலும்ரெண்டாயிரக்கலமேலுமுண்டாண்டே ௱௨௰)
பொன்மகள்கண்ணாத்தாள் புகழ்பண்ணைநெல்விபரம்
நன்மையுள்ளபண்ணை நயினார்க்குச்சொல்லியபின்
தனிமனதுகூர்ந்து தனித்திருக்கும்போதுபள்ளன்
வர்மமெல்லாமூத்தபள்ளி வந்துசொல்லக்கண்டானே ௱௨௰௧
சொந்தடியாள்வந்துகும்பிடுகிறேன்பண்ணையாண்டே-பள்ளன்
சூதறியீரென்றுசொல்லவல்லோவந்தேனாண்டே
தொந்தளிபிட்டல்லோநண்டுபிடிப்பதேனாண்டே-உங்கள்
கொத்தடிமைசெய்யுங்கொடுமையைக்கேளுங்காணாண்டே ௱௨௰௨)

மூத்தினபள் ளிநானென்று சொந்தமுந்தள்ளி-இளையவள்
முகமுறியாமல்-களப்பெறுங்-துகைபிரியாமல்
வந்ததையொதுக்கி-அவனுக்குவிந்தையைப்புதுக்கி-மெய்ச்சால்
மதினியைமேய்ப்பான்-பனங்கள்ளைப்பதினியென்றேய்ப்பான்
சந்தமாம்பாட்டுக்கேழ்க்க-நான்-முந்தானைபோட்டுக்கொண்ட
சஞ்சலமாறே-னவள்செய்ததென்சொல்லப்போறேன்
இந்தனைதொடுப்பான்-எனைக்கண்டால் தெந்தனமெடுப்பான் அவ
னுக்குநீரினிச்சொல்லும்உம்மைப்போலாரினியாண்டே (௱உ௩)

கலிப்பா.

சோதிமணிகண்ணுடையாள் சொல்வளமைபண்ணைமுக
லாதிமுதலானபண்ணை ஆண்டவர்க்குத் தாண்டிவெகு
சேதிசொல்லவேண்டுமென்று சென்றுநின்றுமூத்தபள்ளி
பாதிசொல்லுமுன்னிளைய பள்ளிதுள்ளிவந்தாளே (௱உ௪)

பள்ளிகள் ஏசல்.

குண்டணிபறைந்தரிதென்னமூத்தபள்ளி தினங்
கொள்ளையிடக்கிடையாட்டால்கோபமேன்னடி
உண்டானகாரியந்தானிளையபள்ளி-உனக்
குள்ளது சொன்னால்மனதிலுனக்குநோடி
எனக்கேனுனக்குமடியிளையபள்ளி-உன்போ
லெனுக்குள்ளபள்ளிக்கல்லோஉனுக்குமடி
சினத்துநான்சொன்படியிளையபள்ளி-உன்னைக்
செலுத்தாமல்விட்டால்வர்மந்தீராதடி
தீராதகோபமென்னமூத்தபள்ளி-கொல்லத்
தெருவிலேஊசிவிற்கச்செல்லுமோபோடி
பூறயக்காரிநீதானிளையபள்ளி.முழுப்
பூசினிக்காயும்சோற்றில் புதைப்பாயடி
புதைப்பாய்பணமிருந்தால்மூத்தபள்ளி சும்மாப்
புளுதிப்பிரட்டிலேவாய்போக்காதேபோடி
புதைப்பெல்லாம்நானறிவேனிளையபள்ளி சின்னப்
பள்ளியென்றால்நயினார்க்குப் பக்ஷமல்லோடி
பக்ஷமுண்டுசொல்லுண்டானால் மூத்தபள்ளி நல்ல
பாலும்பதக்குமோருமபதக்கோடி
தெட்சணைவைத்தாரிடத்தில் இளையபள்ளி இந்தத்
தெந்தனவித்தைபடித்தாய் சிறுக்கிபோடி
சிறுக்கிநானுன்னைப்போலே மூத்தபள்ளி இன்னம்

சிகிற்பணைணிமுகங்காட்டித்திரியிறேனேடி
இருக்கிஉறுக்கிவாராயிளையபள்ளி-எங்கள்
எழூர்ப்பத்திலோருநிருப்பதடி
இருபதுவுஞ்சித்தாரென்றால் மூத்தபள்ளி-பள்ளர்
சொன்னக்கண்டாசைகொள்வாணினிச்சொல்லடி
சுருக்கமறிவேனடியிளையபள்ளி-உனக்
குச்சாயமெல்லாபஞ்சக்கர்ரைகச்சாயமடி
ஆடிவாய்பாடுவாய்நீதானிளையபள்ளி- உன்சொல்
ஆர்க்குமிச்சமாணூர்க்குமேர்க்குமோபோடி
எர்க்குமென்றுதானல்லவோமூத்தபள்ளி இப்போ
சப்க்குநாய்க்குந்தடையில்லையென்கிறாயடி
சேர்கையாய்ப்பணமும்நெல்லும்இளையபள்ளி வந்து
சிக்கினுனக்குடம்புதெரியாதோபோடி
தெரியுமினித்திராணிமூத்த பள்ளி-சற்றே
நீண்டிநான்பார்க்கிறேனுன்சீத்துவமடி
நரியெதிர்த்தாற்சிங்கமல்லோயிளையபள்ளி-உன்னை
நடுவிட்டில்நட்டுவைத்தேன்நானல்லோடி
நானறிவேனந்ததச்சேதிமூத்தபள்ளி-நீதா
னட்டுவைத்தாய்பண்ணைச் செய்யில்நாத்தையல்லோடி
பண்ணைப்பள்ளன்கொள்ளவந்தயிளையபள்ளி முறை
பார்க்கநான்பெரியகுடிப்பள்ளியல்லோடி
மிபண்ணைக்கேடாய்ப்பேசுகிறாய்மூத்தபள்ளி-உந்தன்
பெருஞ்சென்னல்க்குடிப்பள்ளிப்பிசகென்னடி
பெரியதினம்பேசுகிறாயிளையபள்ளி-உந்தன்
பேரிலுப்பைக்குடிப்பள்ளிப்பிசகென்னடி
பரிவாயிரண்டுகுடியிளையபள்ளி கோயில்ப்
பண்ணைக்குடும்பனுக்குப்பலித்துதோடி
பலித்தற்குத்தாட்சியென்ன மூத்தபள்ளி-சும்மாப்
பணத்துக்கோ வந்தேனிந்தப் பள்ளனுக்கடி
மெலித்துப பேசனுமாய்சேயிளைய பள்ளிஇன்னம்
வீரிசொல்வாய்நீ கனக்காரியல்லோடி
கனக்காரியென்கிறாயே மூத்தப் பள்ளிதுரை
கட்டளைசெய்யூர்பள்ளிக்கண மல்லோடி
மனுக்கேருள்ளகாலந்தொட்டுமிளையபள்ளிபண்ணை
வந்தநாளில் வந்தவள் நான் வனுவல்லோடி
அல்லவடி கூருகெட்ட மூத்தபள்ளி எந்த

ணுசைப்பள்ளனுக்கு நீ தானாடி போடி
சொல்லச் சொல்லச்மிஞ்சுகிறாயிளையபள்ளிமிகத்
துள்ளுமெருதுபொதிசுமக்குமடி
சுமக்குமெடுத்துவிட்டால்மூத்தபள்ளி வெறுந்
தோதகமாடாதேவண்டித்தோப்பாடிபோடி
இமைக்குங்கண்ணுக்குமேவேறேயிளையபள்ளி உனக்
கென்னைப்போலதாய்தமக்கையில்லையோபோடி
உன்னைப்பார்க்கபின்னையார்சொல்மூத்தபள்ளி விகு
குதிச்செடிநுழையவொண்ணுதடி
பொன்னைப்பலகூரிட்டாலுமிளையப்பள்ளி கூடப்
போட்டிருக்கும்போதிலொன்றப்பொருந்துமடி
பொருந்தாமற்போவதுண்டோமூத்தபள்ளி என்னைப்
பூஷணமாய்வைத்தாலுன்னைப்போற்றுவேனடி
விருந்துப்சாரமல்லயிளையபள்ளி இது
வேளைப்பிசகாய்வந்தவீண்பேச்சடி
பேசிலென்னயேசிலென்னமூத்தபள்ளி களப்
பேரெல்லாமுனக்குவாங்கித்தாரேனடி
ஆசைரதிவேணுமடியிளையப்பள்ளி பள்ள
னந்தரங்கம்நீயல்லவோஅறிவாயடி
நீயுஞ்சொன்னாய்நானுஞ்சொன்னேன்மூத்தபள்ளி நம்பள்
நீதிமார்க்கந்தப்பவொண்ணாதடிகேளாய்
தாயும்பிள்ளையும்போலேயிருபேரும் வாழி
தான்மகிழ்ந்துபாடிநன்றாயிருக்கவாழி
வாழிவாழிகண்ணுடையாள்பாதம்வாழி முத்து
வடுகநாதேந்திரமகாராஜன்வாழி
வாழிபுவிநாடுநகர்மிகவாழி தமிழ்
வாழிமறைவாழிதினம்வாழிதரோன.

கண்ணுடையம்மன்பள் முற்றும்.

வெண்பா.

கண்ணுடையதாய்மகிமை காசினியோ ரிவ்வளவென்
றெண்ணுடைய தாய்மதிக்க வேலாது—மண்ணுடைய
புன்முளைக்க வெத்தனைநாள் போகும்படி னேயவித்த
நென்முளைத்தல் சாட்சி நிஜம்.

உ. சிவமயம்.

கண்ணாத்தாள் துணை.

சஞ்சீவிமலைசுவாமியவர்கள் கண்ணாத்தாள் கடாட்சத்தால் கண்டு பிடித்த

சஞ்சீவி தைலம்.

இதனால் சகல கனதனவான்களுக்கும் அறிவிக்கும் விஞ்ஞாபன மாவது யாதெனில்:—

நீர்வள, நிலவளகுடிவளமும் நிறைந்திராநின்ற பரதகண்டத்தின் சகல ரோகவியாதிகளுக்கும் மூலிகைகளினால் தீருமென்பதை நாமும் நமது முன்னோர்களும் நம்பி பூரணசுகமடைந்திருக்கிறோம். இப்பவும் சஞ்சீவிமலையின்கண் நெடுங்காலம் நேமநிஷ்டைகளோடும் மகாதபோதனராய் தபசு இருந்து தனது கோரிக்கைகளைநிறைவேற்றி பின்னர் குபேரச்செல்வம் அடங்கிய மகாமகிமைதங்கிய நாட்டரசன் கோட்டையில்யாவர்க்கும் பாதுகாப்பாயிருக்கும் லோகமாதாவாகிய கண்ணாத்தாள் ஆலயம்பதில் தோன்றினார் சஞ்சீவிமலை சுவாமியார்.

ஒருநாள் நடுசாமத்தில் அம்பாள்கிருபைபூண்டு சுவாமியாருக்கு தோன்றிசிற்சிலமூலிகைகளைச்சொல்லி தைலமிறக்கி ரோகநோய்க்கு தீர்க்கும்படிகட்டளையிட்டார். அன்னவரும் அவ்வுத்தரவை சிற மேற்கொண்டு தைலம்செய்து யாவருக்கும் உபயோகமாகும்படி செய்திருக்கிறார். அதனால் கைகால்கடுப்பு, மண்டைகுத்து, கண்பார்வையில்லாமை, கண்ணெரிச்சல்,வாய்வேக்காடு, வயிற்றுவலி, குன்மம், சிலந்தி,ராஜபிளவைகள், இவ்வியாதிகள் நீக்கும் அதை உட்கொள்ளவேண்டியது. இது சத்தியம். வெளியேகாணும் சர்மவியாதிகளுக்கு மேல் பூச வேண்டியது.

நிற்க புத்திரசந்தான மில்லாதவர்களுக்கும் தைலத்தைவாங்கி சுத்தமும் தீட்டுமுதலியவைகள் அண்டக்கூடாத இடத்தில் வைத்துவெள்ளி செவ்வாய் இரண்டு கிழமைகளில்சாம்பிராணி தூபதீபம் கொடுத்து அம்பிகைகண்ணாத்தாளுக்கு ஒருசந்திவிரதமிருந்து அம்பிகையைநினைத்து வெள்ளிக்கிழமைதோறும் மூன்றுவாரம்சாப்பிடவும். உடனேபுத்திரச்செல்வம் உண்டாகும். இதுசத்தியம். இது நம்பாதவர்களுக்கு பலிக்காது அப்படி வாதிப்பவர்களுக்கு ஒன்பது உருவங்களில்யேதேனும் நாசமடையும்.

ஷை தைலத்தை கால்நடை பிராணிகளுக்கு வியாதிவரும் பட்சத்தில் அவைபருகும் ஜலத்தில்கலந்து கொடுக்கவும்.

இங்கனம், கண்ணாத்தாள் பக்தர்
நாட்டரசன்கோட்டைசஞ்சீவிமலைசுவாமியவர்கள்.

தைலமும் புஸ்தகமும் கிரயம் **6-8-0.**

கண்ணாத்தாள் துணை.

4